
உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI

சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ்

மலர் 6 | சித்திரபானு - மார்கழி | DECEMBER 2002 - JANUARY 2003 | இதழ் 09



ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. துன்பங்கள் அகல ....................................................... 01
2. மாணிக்கவாசகர் திருவாசகம் - திருப்பள்ளியெழுச்சி ....................................................... 02
3. திரு. வ. செல்லையா அவர்களை வாழ்த்துகிறோம் ....................................................... 03
4. அன்புடைமை ....................................................... 04
5. பதினெண் சித்தர்கள் - ஸ்ரீ காலாங்கி ....................................................... 05
6. இந்த மனம் வெறுக்க வழியில்லை ....................................................... 08
7. ஆடவல்லான் ....................................................... 14
8. குமரகுருபரர் ....................................................... 22
9. மட்டுவிலூர் தந்ததிறன் மைந்தன் நடராசன் ....................................................... 25
10. சிவப்பிரகாசம் ....................................................... 26
11. நினைவிற் கொள்வதற்கு ....................................................... 28


**சந்தா நேயர் கவனத்திற்கு**

- முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
- இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

## சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$15

சைவநீதியின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.


சந்தா அனுப்பவேண்டிய முகவரி:
*C. Navaneethakumar*
42, Janaki Lane, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 595221


**சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்
... யாழ்ப்பாணம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவநீதி
SAIVANEETHY

# சைவநீதி

மலர் 6 : சித்திரபானு - மாசி : ... – 09

கௌரவ ஆசிரியர்:
மகாபூஷணம், ஞானசிரோமணி,
சைவசித்தாந்தவித்தகர், சிந்தாமணி,
திரு. ம. செல்லையா

வழிநடாத்துநர்:
சிவஸ்ரீ. கு. குஞ்சிதபாதக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
(அமைச்சர்),
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman U.P.S.

திரு. கு. மகாலிங்கம்

பதிப்பாசிரியர்:
திரு. கே. திருநீலகண்டன்
சைவநீதி அச்சகம்

விநியோகம்:
திரு. க. சிவஞானம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு. செ. நவநீதகுமார்
12, ஞானம் ஒழுங்கை, கொழும்பு 04

தொடர்புக்கு: 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி: 595221

## துன்பங்கள் அகல...

கவலை இல்லாத மனிதர் இல்லை. எல்லோருக்கும் ஏதோ ஒருவிதத்தில் கவலை இருக்கும். இந்தக் கவலையைப் போக்குவதற்கு வழி என்ன? பெரு கவலையைத் தீர்த்து அருளும்படி சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனிடம் விண்ணப்பம் செய்கின்றார்.

முப்புரங்களை எரிசெய்த அப்பனே விதியாகி வினையின் பயனாகி இருக்கும் தீமையகற்றும் இறைவா காலைப்பொழுதிலே எழுந்து உன்னை வழிபடுபவர்களின் கவலையைப் போக்கி அருள்.

"மேலைவிதியே வினையின் பயனே விரவார் புரமூன்றெரி செய்தாய்
காலை எழுந்து தொழுவார்கள் கவலைக்களையாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேனடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயிலம்மானே."

எனவே காலைப் பொழுதிலே கைகூப்பி நின்று நினைந்து தொழுதால் நம்மை அருகின்ற கவலைகள் பறந்தோடும்.

காலையில் மட்டும் ஆலயம் தொழுதால் போதாது. எப்போதும் அவனை நினைந்து வழிபட வேண்டும். ஞானியர்கள் காலை, உச்சி, மாலை ஆகிய மும்முறை தாம் மனங்கொண்டு வழிபடுகின்றனர். அதனால் அவர்கள் துன்பமின்றி இருக்கின்றனர். ஆகவே துன்பங்கள், துயரங்கள் நீங்கி இன்பம் பெறவேண்டுமானால் இறைவனை இரவிலும் பகலிலும் பணிதல் வேண்டும்.

"துன்ப மின்றித் துயர் இன்றி என்று நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன்னீசன் இறைவன் என்றுள்குவார்க்கு
அன்பனாயிடும் ஆனைக்கா அண்ணலே."

எனவே நாம் இறைவன் நாமத்தை ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஜெபித்து இறைவனைச் சிந்தித்து வந்தால் கவலைகள் விலகும். சிந்தனை தெளிவதற்கு வழிவகையும் இதுவேயாகும். இல்லாவிடின் மதியானது விதிவழியே சென்று இடர்ப்படுவதையும் உண்டுபண்ண வழிவகுக்கும்.

"சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் திருவாசகம்

## திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் அடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# கலாபூஷணம் விருது பெற்றவரும் சைவநீதியின் கௌரவ ஆசிரியருமான திரு. வ. செல்லையா அவர்களை

# வாழ்த்துகிறோம்

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு 1946ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட திரு. வ. செல்லையா அவர்கள், அதற்கு முன்பே - 1945ல் சென்னை சைவ சித்தாந்த சமாசத்தார் நடாத்திய இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றார்.

சைவாசிரியர் கலாசாலைப் பிரவேசத்தினால் இவருக்கு, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மேலைத் தவமுனிவர் பொ. கைலாசபதி ஆகிய சைவசித்தாந்தப் பெரியார்களிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் 1945ல் முளைகொண்ட இவரது சைவப் புலமை மேலும் செழித்து வளர்ந்தது. 1953ல் ஆசிரியர் செல்லையா சைவப் புலவர் பரீட்சையில் சித்தி பெற்றார். பண்டிதமணியின் இலக்கிய இரசனையும் நகைச்சுவையாகப் பேசும் ஆற்றலும் இவரைப் பற்றிக்கொண்டன.

சைவப்புலவர் செல்லையா 1960ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் நடாத்திய வித்துவான் பரீட்சையில் சித்தியடைந்து வித்துவான் சைவப்புலவர் ஆனார். அவ்வாண்டிலேயே அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஆரம்பமானது. சைவப் புலவர் செல்லையா அதன் தலைவரானார். இவருடைய தலைமையில் சைவப்புலவர் சங்கம் பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்புற இயங்கியது.

இக்காலப்பகுதியில் ஐந்து சைவப்புலவர் சங்க மாநாடுகளும் சைவ மாநாடுகளும் சைவ சித்தாந்த எழில்ஞானப் பெருவிழாவும் நடைபெற்றன.

மாநாடுகளின்போது, கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராயிருந்த மு. வயிரவப்பிள்ளை அவர்களுக்கும் புலவர் கருணாலய பாண்டியனாருக்கும் சித்தாந்த வித்தகர் பட்டமும்; இந்து சாதன ஆசிரியர் நம சிவப்பிரகாசம் அவர்களுக்கும் கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் சைவபூஷணம் பட்டமும் வழங்கப்பட்டன. சைவப்புலவர் அருணாசல தேசிகர் முதலியோர் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டனர். இதனால் பட்டம் பெற்றவர்களைப் பெருமைப்படுத்தியதோடு அல்லாது, பட்டமளித்த சைவப்புலவர் சங்கம் தன்னையும் பெருமைப் படுத்திக்கொண்டது.

வித்துவான் சைவப்புலவர் அவர்கள் இருபத்தொரு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதினார்.

சைவப்புலவர்மணி, ஞானசிரோன்மணி, ஞானப்பெருமணி முதலிய பட்டங்கள் இவரைத் தேடி வந்தடைந்தன. இப்பொழுது 2001ஆம் ஆண்டுக்குரிய கலாபூஷண விருதும் இவரை நாடிவந்தடைந்திருக்கிறது.

கலாபூஷணம் அவர்கள் இன்னும் பல பட்டங்களையும் சுகவாழ்வையும் பெற்றுச் சைவப் பணிபுரிந்து பல்லாண்டு வாழவேண்டுமென்று சிவனருளை வேண்டித் துதிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடைமை

அச்சுவேலி ச. குமாரசாமிக்குருக்கள்

அன்பாவது ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் மன நெகிழ்ச்சியாம். நம்மோடு தொடர்புடையவராய் நமக்கு இனியவராய் உள்ளவர் யாவர் என்று ஆராய்தல் வேண்டும். தந்தை தாய் முதலியோருக்கும் நமக்கும் உள்ள தொடர்பு நிலையில்லாதது. இவ்வுடம்பு நீங்கினால் ஆகாது. இவ்வுடம்பு அழியவே இதனாலாகிய தொடர்ச்சியும் ஒழியும். உடம்பிலே தொடர்புள்ளபோதும் சில காலங்களிலே நமது உறவினரே நமக்குப் பகைவராகவும், பகைவரே உறவினராகவும் காண்கின்றோம். ஆதலால் இவர்களை எமக்கு இனியர் என்று கொள்ளுதல் கூடாது. எந்நாளும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்னும் கருத்து நமக்கு உண்டு. ஆயினும் நாம் இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெறும் வழி இது என்று உள்ளவாறு அறிகிலோம். துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்குச் சுதந்திரத்தை உடையோம் அல்லோம். ஆகையால் எமக்கு நாமே இனியம் எனக் கொள்ளுதலும் பொருந்தாது.

ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங் கருணையினாலே அவர்களை அநாதியே பற்றி நின்ற மலத்தை நீக்கி மோக்ஷத்தைக் கொடுத்தருளும் பரமபதி சிவபெருமான் ஒருவரே. ஆதலால் அவர் ஒருவரே நமக்கு இனியவர் என்று கொண்டு அவரிடத்திலேயே அன்பு செய்தல் வேண்டும். அன்பு இல்லாதவர் தமக்குச் சிவபெருமானை ஒருநாளும் அடைதல் கூடாது. இடையறாது வளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவபெருமான் விளங்குவர். சிவபெருமானிடத்து அன்புடைமைக்கு அடையாளங்கள்: அவருடைய உண்மையை நினைக்கும்பொழுதும், பேசும்பொழுதும், காணும்பொழுதும், தன்வசமழிதலும், ஆனந்த அருவி பொழிதலும், விம்மலும் பிறவுமாம். இவ்வன்பு பலபிறவிகளிற் செய்த புண்ணிய முதிர்ச்சியினாலே வரும். இவ்வன்புடைமையால் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கிய பெரியார் கண்ணப்ப நாயனார்.

அருச்சுனனென்பான் சிவபெருமான் கட்டளையிட்டருளிய பிரகாரம் பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரிலே வேடர் தலைவனாகிய நாகன் என்பவனுக்குத் தத்தை என்பவளிடத்தில் புத்திரனாய்ப் பிறந்தான். அப்பிள்ளைக்குத் திண்ணனார் என்று பெயரிடப்பட்டது. திண்ணனார் வில்வித்தையிலே சாமர்த்தியம் உடையவராயினார். அவர் ஒருநாள் வனத்திற் சென்று வேட்டையாடினார். அப்பொழுது ஒரு பன்றி வேடர்களுடைய வலையை அறுத்து வேகமாக ஓடியது. திண்ணனார் அப்பன்றியைக் கொல்ல நினைத்து விரைவொடு தொடர்ந்தார். பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய் இளைப்பினால் ஒரு மரநிழலிலே நின்றது. திண்ணனார் அதை உடைவாளினாலே குற்றினார். அவருடன் வந்த நாணன், காடன் இருவரும் இறந்த பன்றியைக் கண்டு "இதை நெருப்பிலே வாட்டித் தின்று தண்ணீர் குடிப்போம்" என்றார்கள். திண்ணனார் அதற்கு உடன்பட்டு அவர்களுடன் சிறிது தூரஞ் செல்ல, திருக்காளத்திமலை தோன்றியது. அவர் நாணனை நோக்கி, "நமக்கு முன்னாகத் தோன்றுகின்ற இம்மலைக்குப் போவோம்" என்றார். நாணன் "இம்மலையில் குடுமித்தேவரைக் கும்பிடலாம்" என்றான். திண்ணனார் பொன்முகலியாற்றை அடைந்து அதன் கரையிலுள்ள மரநிழலிலே பன்றியை வைத்தார். பின்பு காடனை நோக்கி, "தீக்கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு" எனக் காடனுக்குக் கட்டளை செய்து நாணனோடும் பொன்முகலியாற்றைக் கடந்து மலையிலே பெருமையோடு ஏறிச்சென்று சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளாத்திரத்திலே பரமசிவனுடைய கிருபா நோக்கத்தைப் பெற்று, முன்னுள்ள குணங்கள் மாறிப் பரமசிவனிடத்தில் வைத்த அன்புருவமாயினார். விரைந்து சென்று தழுவி முத்தமிட்டார். சரீரம் முழுவதும் உரோமாஞ்சங்கொள்ள, கண்ணீர் பொழிய, மனங்கசிந்துருக, ஆனந்தங்கொண்டு, "துஷ்ட மிருகங்கள் இருக்கிற இக்காட்டிலே நீர் துணையின்றி யேகாகியாய் இருந்தீரே" என்று துக்கித்துப் புலம்பினார். பின் ஒருவாறு தெளிந்து, "இவருடைய முடியிலே நீரை வார்த்துப் பச்சிலைகளையும் பூவையும் இட்டவர் யாவரோ?" என்றார். அப்பொழுது அங்கு நின்ற நாணன், "பண்டு, உமது பிதாவுடனே வேட்டையாடிக் கொண்டு இம்மலையிலே வந்தபோது, ஒரு பார்ப்பான் இவர் முடியிலே நீரை ஆட்டி, இலையையும் பூவையும் சூட்டி, உணவை ஊட்டி, சில வார்த்தைகளைப் பகர்ந்தான். அதைக் கண்டிருக்கின்றேன். இன்றும் இப்படி அவனே செய்தான் போலும்" என்றான். அதைக்கேட்ட திண்ணனார் இந்தச் செய்கைகளே திருக்காளத்திநாதருக்கு இனிய செய்கையென்று கடைப்பிடித்தார். பின், சுவாமி அமுதுசெய்வதற்கு இறைச்சி கொண்டுவர விரும்பி, அவருடைய சந்நிதானத்தை அருமையாக நீங்கி, [illegible]இடையங்களிலுண்டாகும் வேட்கை நீங்கி, அன்புமயமாகி அங்குள்ள சோலையிலே புகுந்தார். காடன் அவரைக் கண்டு ஓடி வந்து, "நெருப்பு உண்டாக்கி வைத்திருக்கின்றேன். இவ்வளவு நேரமும் நீர் தாழ்த்தது என்னை" என்றான். நாணன் அவனை நோக்கி "இவர் மலையிலே உள்ள தேவரைக் கண்டு நீங்கமாட்டாதவராய் நிற்கின்றார். அந்தச் சுவாமிக்கு ஊட்ட இறைச்சி கொண்டு போதும் பொருட்டே வந்திருக்கிறார்" என்றான். திண்ணனார் பன்றியை [illegible] இனிய தசைகளைக் கிழித்துக் காய்ச்சி, [illegible] தம்முடைய வாயிலே இட்டுச் சுவைபார்த்து, இனியனவாகிய இறைச்சிகளைத் தேக்கிலைக் கல்லையிலே வைத்து, மற்றவைகளை உமிழ்ந்தார். இதைக்கண்ட நாணனும் காடனும் இருவரும் "இவர் [illegible] தாமுண்கின்றாருமில்லை; பசியுடைய எங்களுக்குத் தருகின்றாருமில்லை; தெய்வப் பித்துக்கொண்டார். இதை நாகனுக்குக் கூறுவோம்" என்று சொல்லிக் காட்டிலே நின்ற ஏவலாளரையுங் கொண்டுசென்றார்கள்.

திண்ணனார் கல்லையில் வைத்த அமுதை மறைத்து, திருமஞ்சனம் ஆட்டும்பொருட்டு ஆற்றுநீரை வாயினால் முகந்து, பூக்களைக் கொய்து தலையிலே செருகி, ஒரு கையில் அம்பையும் வில்லையும் மற்றக் கையில் இறைச்சியையும் ஏந்தி, மிக விரைந்து சுவாமியை அடைந்தார். அடைந்து அவருடைய திருமுடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடிமேற் சாத்தினார். பின்பு இறைச்சியைத் திருமுன் படைத்து, "கொழுமையான இறைச்சிகளெல்லாவற்றையும் நாக்கினாற் சுவைபார்த்துப் படைத்தேன். மிக நன்றாயிருக்கின்றது. நாயனீரே! இதை அமுதுசெய்தருளும்" என்று சொல்லி உண்பித்தார். சூரியன் அஸ்தமனமாயினான். தேவரைத் துஷ்ட மிருகங்கள் துன்பஞ் செய்யக் கூடும் என்று இராமுழுதும் கையிலே வில்லை ஏந்தி, சுவாமிக்குப் பக்கத்திலே விழித்துக்கொண்டு நின்றார். அப்படி நின்ற திண்ணனார் சுவாமிக்கு இறைச்சி கொண்டுவரும்படி வைகறைப் பொழுதிலே சென்றார்.

திருக்காளத்திபீசுரைத் தினந்தோறும் சைவாகம விதிப்படி அருச்சிக்கும் ஆதிசைவராகிய சிவகோசரியார் என்பவர் ஆற்றிலே ஸ்நானஞ் செய்து திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்துக் கொண்டு சிவசந்நிதானத்திலே போனார். போகும் பொழுது இறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டு நடுநடுங்கி, "மகாதேவரே! தேவரீருடைய முன்னிலை

*Whatever thing, whatever being [illegible]; by that thing, by that thing [illegible].* [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வேட்டுவன் ஒருவன் இதனைச் செய்தனன் போலும்; உமக்கு இது திருவுள்ளமோ" என்று இரங்கினார். பின்பு அங்கே கிடந்த இறைச்சி, எலும்பு, கல்லை இவைகளையெல்லாம் திருவலகினால் மாற்றிக் குற்றம் நீங்கும்படி சுத்திசெய்து, அன்று பூசை செய்து பணிந்து, அகலமாக நீங்கித் தபோவனத்தை அடைந்தார்.

முன்னர் வேட்டைக்குச் சென்ற திண்ணனார் பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சியைப் பக்குவப்படுத்தித் தேக்கிலையில் வைத்துத் தேனைக் கலந்து, நீரும் பூவுங்கொண்டு மலையிலேறி, முன்போலப் பூசைசெய்து இறைச்சிக் கல்லையைத் திருமுன் வைத்து "இவை பன்றி மான் முதலிய மிருகங்களின் இறைச்சி, அடியேனும் சுவைபார்த்தேன். தேனுங் கலந்திருக்கின்றது" என்று சொல்லித் திருவமுது செய்வித்து, அவருக்குப் பக்கத்தில் நின்றார்.

அப்பொழுது தனது மகனுடைய செய்கையை நாகனும் அவன் மனைவியும் அறிந்து நாகன், தன் புத்திரரை அடைந்து தன்பக்கலாக வசப்படுத்தியும் முடியாமையினால் கைவிட்டுப் போனான்.

சிவதொண்டின் வழுவாது நின்ற திண்ணனார் சுவாமிக்குப் பகலில் இறைச்சியூட்டியும், இரவில் நித்திரையின்றியும் இந்தப் பிரகாரம் தொண்டு செய்துவந்தார். சிவகோசரியாரும் தினமும் வந்து இறைச்சியிருப்பதைக் கண்டு சுத்திசெய்து அருச்சித்து "என்னுடைய நாயகனே! இக்குற்றத்தைச் செய்பவரைப் பாவினை உம்முடைய திருவருளால் நீக்கியருள வேண்டும்" என்று வேண்டினார்.


ஐந்தாம்நாள் இரவு காளத்திநாதர் சிவகோசரியாருக்குக் கனவிலே தோன்றி, "அப்பனே! நீ அவனை வேடுவன் என்று நினையாதே; அவனுடைய உருவமும் செய்கையும் அன்பே; அவனுடைய அறிவு நம்மை அறியும் அறிவே; அவனுடைய அன்பினாலாகிய செய்கைகளை உனக்கு நாளைக்குக் காட்டுவோம்; நீ ஒளித்திருந்து பார்; உன் மனக்கவலையை நீக்குதி" என்று கூறி மறைந்தருளினார். சிவகோசரியார் மறுநாள் விடியுமுன் அருச்சித்து அவருக்குப் பின்பாக ஒளித்திருந்தார். திருக்காளத்திநாதர் திண்ணனாருடைய அன்பு முழுவதையும் சிவகோசரியாருக்குக் காட்ட விரும்பித் தமது வலது திருக்கண்ணினின்றும் உதிரம் பாயச் செய்தார். வேட்டையாடி இறைச்சியும் மலரும் நீரும் கொண்டுவரும் திண்ணனார் உதிரம் சொரிதலைக் கண்டு, திருவாயிலுமிழ்ந்த நீரைச் சிந்த, இறைச்சியும், புஷ்பங்களும் முடியினின்றும் சோர, நிலத்திற் பதைத்து விழுந்தார். இறந்தவர் போன்று மயங்கினார். சுவாமிக்குத் தீங்கு செய்தவர் யாவரோ என்று எங்கும் பார்த்தார். பின் பெருமானைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்துக் கதறினார். பின் ஒருவாறு தெளிந்து வேடர்கள் புண்ணைத் தீர்க்கின்ற பச்சிலைகளைப் பிடுங்கிக்கொண்டுவந்து திருநேத்திரத்திலே பிழிந்துவிட்டார். அதனால் இரத்தம் நிற்காமை கண்டு, சிறிது ஆலோசித்தார். ஆலோசிக்க "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி அவர் கருத்திலே வந்தது. உடனே அவர் மனமகிழ்ச்சியோடும், திருமுன்னே இருந்து, அம்பினால் தம்முடைய கண்ணைத் தோண்டி முதல்வருடைய கண்ணில் அப்பினார். அப்ப, இரத்தம் நிற்பதைக் கண்டார். உடனே சந்தோஷம் பொங்கிக் குதித்துப் பாய்ந்து கூத்தாடி நின்றார். காளத்திநாதர் சிவகோசரியாருக்குத் திண்ணனாருடைய அன்பைப் பின்னும் காட்டத் திருவுளங்கொண்டு தமது இடக்கண்ணில் உதிரம் பாயச்செய்தார். அதைக்கண்ட திண்ணனார் ஏங்கிப் பின் ஒருவாறு தெளிந்து, "இதற்கு அஞ்சேன். மருந்து கைகண்டேன்; இன்னும் ஒரு கண்ணுண்டு! அதை இடந்து அப்பி இதனைத் தீர்ப்பேன்" என்று நினைத்துத் தம்முடைய கண்ணைத் தோண்டிய பொழுது, சுவாமியுடைய கண் இவ்விடத்து இருக்கிறது என்று

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

துன்பமில்லாத நிலை வேண்டி விரும்பினால், எல்லாப் பொருள்களிலும் உள்ள பற்றை விட்டுவிட வேண்டும்; துறந்தபின் இங்கு பெறக்கூடிய நன்மைகள் பலவாகும். 342

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண் சித்தர்கள்



# ஸ்ரீ காளாங்கி

Dr. எஸ். லோகநாதன் B.S.M.S.(India), J.P
மரகதம் கிளினிக், நானாட்டான், மன்னார்.

இவரும் பதினெண் சித்தருள் ஒருவராவார். திருமூலரின் சீடரான இவருக்கு போகர் சீடராக இருந்தார். சீனதேசத்தவரான இவரும் உலோகங்களை முதலாகக் கொண்டு பொருட்கள் செய்யும் ஆசாரி வகுப்பை அதாவது விஸ்வகர்மா வகுப்பைச் சேர்ந்தவராவார். காளாங்கிச் சித்தரே பாரசீகத்திற்குச் சென்று தங்கி மிகவும் புகழ்பெற்று "யகோ" ஆக இருக்கலாமெனவும், இடைச்சங்க காலத்திலும் வாழ்ந்தவரென்றும் அறியக்கிடக்கின்றது. நான்மறைகளில் ஒன்றான யசுர் வேதத்தில் "காலாக்கினி உருத்திரம்" என ஒரு மகா மந்திரம் உண்டு. இதனைக் கண்டவரே இக் காளாங்கிச் சித்தராவார். உருத்திரக் கடவுளான சிவனுக்கு பிரளய காலத்தில் காலாக்கினி வடிவமான சோதிப் பிழம்பு வடிவம் உண்டென்பதையும் அதனை நேரிலும் கண்டவர் இக்காளாங்கிச் சித்தராவார். இத்தகைய தோற்றத்தை அதாவது காலாக்கினி உருத்திரத்தைத் துதித்த மறையின் பகுதியே "காளாங்கி உருத்திரம்" எனத் தற்காலத்திலும் பெயர் மருவி வழங்குகிறது. இவர் காஞ்சிபுரம் என்றழைக்கப்படும் அக்காலத் திருக்கச்சிபுரத்தில் சமாதி எய்தினார்.

---

அன்புடைமை - தொடர்ச்சி.........

அப்பொழுது சி. இடக்காலை அவர் கண்ணில் அருகே ஊன்றி மனவிருப்பொடும் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை ஊன்றினார். திண்ணனார் கண்ணில் ஊன்றத் தேவதேவர் சகியாதவராகி, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என்னன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று அருளிச்செய்து, கண்ணைத் தோண்டும் கையை இலிங்கத்தினின்றும் எழுந்த திருக்கரத்தினாலே பிடித்தருளினார். அந்தக்காலம் முதலாக இறைவர் கூறியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னுந் திருநாமம் வழங்குகின்றது. சிவபெருமான் பெருமுன்னை திண்ணனாருடைய கரத்தைத் தமது திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு "நீ எம்முடைய வலப்புறத்தில் நில்" என்றருளிச்செய்தார்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநேரிசை

காப்பதோர் வில்லு மம்புங் கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

## சோமேசர் முதுமொழி வெண்பா

ஊனுக்கு னென்னு முரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா - வானதனாற்
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

*After a man has renounced (all things), there will still be many things in this world which he may desire; if he should desire those, let him while it is time, abandon (that desire). 343*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மனம் வெளுக்க வழியில்லை

[illegible]

மனிதம் மனத்தோடு தொடர்புடையது. மனம் உடையவன் மனிதன். எனவே மனிசத்தனம் அவன் பிறப்பின் சொத்து. இந்த மனத்தெழுச்சிப் பாடுதான் வாழ்வு. வாழ்வு புனிதமாய் அமைய, வாழ்க்கைப் புனிதமாய் அமைக்க மனம் சிறக்க வேண்டும். மனம்போல வாழ்வு என்பர். மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம் என்பது அறிவுரைத்தல். ஆத்மீக நெறியிலும் மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பதும் ஒரு வாக்கு. எனவே மனம் சிறக்க இனம் சிறக்கும். மனிதநிலை தளர்ந்தால் அது மிருகநிலை. அவ்வகை மாக்கள் என்பர் இலக்கண நூலோர். மாவும் மாக்களும் ஐயறிவினவே என்றார் தொல்காப்பியர். வெள்ளைக்கில்லைக் கள்ளச்சிந்தை. பிள்ளை மனம் வெள்ளை மனம். பிள்ளை வளர வளர மனம் வளர்கிறது. ஆடை [illegible] அது [illegible] மையொற்றும் தாள்போல. எனவே குழந்தைப் பருவந் தொட்டே அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அப்போதான் ஒரு நல்ல சமுதாயம் உருவாகும். உருவாக்கவும் வேண்டும். சுகாதாரமான வாழ்க்கை நீரோட்டம் சுகந்தமாய் அமைய மனமே வேர். காய்வோர் செவ்விதாய் அமைந்தாற்றான் கட்டடம் நிலைகுலையாது. அத்திவாரம் இளமையில் இருந்தே சமுதாயம் நன்கு கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரு நல்ல சமுதாயம் நாட்டின் செல்வம், ஊன்றுகோல். பல்விதமான சமுதாயச் சிற்பிகளின் சிந்தனைத் திறத்தால் ஒரு உயர்ந்த சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். நாமெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை. கெடுவான் கேடு நினைப்பான். ஒரு சிற்பியின் கைவண்ணத்தால் கோயிலின் வாயிற்படியும் அமைகிறது. மூலக்கிருகத்தில் அமைந்த தெய்வச்சிலையும் உருவானது. காலிலே மிதிபடும்படி. கூப்பு கரத்துக்கு அருள் பாலிப்பது தெய்வச்சிலை. இந்த நுண்கருத்தைக் கவிதையில் வடித்துள்ளார் பாரதியார்.

ஆங்கொருகல்லை வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி, மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினான், உலகினோர் தாய்நீ;
யாங்கணே, எவரை, எங்ஙனஞ் சமைத்தற்
கெண்ணமோ, அங்ஙனஞ் சமைப்பாய்;
ஈங்குனைச் சரணென் றெய்தினேன்; என்னை
இருங்கலைப் புலவனாக் குதியே

- பாஞ்சாலி சபதம்.

மனங்கொண்டது மாளிகை. மனம் போல மாங்கல்யம் என்ற பொருள் பொதிந்த வழக்கியல் மரபுகளை அடிப்படையாகக் கொண்டவை. மனத்தைக் கல்லாக்காமற் கனியாக்கவும், மல்லிகை மலராக்கவும் மாற்றலாம். மாறும். வெண்மை புனிதமான நிறம். அது சாந்தி - சமாதானம் - நேர்மை - அமைதி - சாந்தம், தண்மை கொட்டும். மாசறு விழுமிய மனமுவந்த மனதுக்கு வந்த நிறம். கலைமகள் தூய வெண்மைக் கோலம் உள்ளவள். தூயமனத்திலே உறைந்து குடியேறுவாள் என்பதை வெளிப்படுத்துவது வெண்மையான திருக்கோலம். உள்ளக் கமலத்துறையும் உத்தமனார் வேண்டுவது. எனவே மனம் புனிதமாய், தூய்மையாய் அமைவது புனித வாழ்வின் சோபான [illegible]. மனத்திற் பலவிதமான அழுக்குச் சேராமற் பேணுவது ஆன்மீகவர் கடன். உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும். அறிவிலே தெளிவு, நெஞ்சில் உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின்மீது தனியரசாணை வேண்டும் என்கிறார் பாரதி. புலனடக்கம் மனப்புனிதத்தை என்றும் பேணிக்காக்கும். நம்மிடம் அடிக்கடி வந்து பலக்கும் விலங்கியற்கை இல்லையெனில் [illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் விருவ நாட்டினில் விண்ணுறலோமே பெண்ப் புதுமைக் கவிஞன் நல் பாரதியின் பொருத் துள்ளமை புருநகைக்குரியது. இந்த மனத்தைக் குரங்காக, காற்றாக, குதிரையாக, ஏலப் பலவாக எல்லோரும் உருவகம் செய்துள்ளனர். எனவே அழ வாய் போட்டு மனதை நல்வழிப்படுத்துவதும் நட் கையில் தான் உள்ளது.

மனமெனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனாமறன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்
இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றிலை ஆனாலோ
நினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்
சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
நனவில்லை அறியாயோ யானிங்கு இருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே.
திருவருட்பா, தத்துவ வெற்றி

காடும் கரையும் மனக்குரங்கு
கால்விட்டு ஓட, அதன் பிறகே
ஓடும் தொழிலாற் பயன்உளதோ?
ஒன்றாய், பலவாய், உயிர்க்கு உயிராய்
ஆடும் கருணைப் பரஞ்ஜோதி
அருளைப் பெறுவதற்கு அன்புநிலை
தேடும் பருவம் இதுகண்டீர்
சேர வாரும் ஜகத்தீரே!
- அருமாலைவர் பாடல், காடுங்கரையும் 1

ஆடும் கருணைப் பரஞ்ஜோதி தில்லைக் கூத்தனான அருள் ஒளியின் புலனடக்கவழி மன அடக்கம் ஒவ்வொருவர் வாழ்வுக்கும் இன்றியா மையாதது ஆகும். பெருமைக்குரிய பிள்ளையார் குலத்துக்கு இனம் என்று. எம்மனதை, மனராக்கியம், அறிவு, ஆற்றல், இறைபக்தியினால் செவ் வழிப்படுத்துவதும் நம் முயற்சியாகும். இம்மனதை ஒரு பெண்ணாகக் காட்டுகின்றார் பாரதியார்.

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்
ஒன்றையே பற்றி ஊசல் ஆடுவாய்
அடுத்ததை நோக்கி அடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்து கை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாது போய்விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
.........................................
புலன்புலப் படுத்தும் புலனா பெண்ணை
உலக உருளையில் ஒட்டுற வகுப்பாய்
இன்பெலாந் தருவாய் இன்பத்து மயங்குவாய்
இன்பமே நாடி எண்ணிலாப் பிழை செய்வாய்
தன்பின் நிற்கும் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய் காணெனிற் காணாய்
மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னொடு வாழு நெறியுநன் கறிந்திடேன்
இத்தனை நாட்போல் இனியுநின் இன்பமே
விரும்புவன், நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன், முத்தியுந் தேடுவன்
உன்விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன்.
- பாரதியார் பாடல்: 20 மனப்பெண்

மனச்சேட்டைகளுக்கு இடமளிக்காமல் இறை வழிப்படுத்துவதும் ஒரு முயற்சியாகும். இதனையே பட்டினத்தார்,

"நினைமின் மனனே! நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே"
என வழிப்படுத்துகிறார்.

அப்பர் பெருமான் மனத்தைப் பிடித்து இழுத்து வந்து "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே

*Let the five senses be destroyed, and at the same time, let everything be abandoned that (the ascetic) has (formerly) desired.* 343

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரீ வா" என நல்வழிப்படுத்துகிறார். சாந்தகுணமாகிய உயிரின் நல்வாழ்வுக்காக நம் மனதைச் செம்மைப்படுத்த வேண்டும். அழுக்கேறிய துணியை சோடா போன்ற உப்புகளில் ஊற வைத்து, வெள்ளாவியில் வேகவிட்டு, கல்லிலே அடித்து, தப்பி, கசக்கி நீரில் அலசிப் பிழிந்து உலர்த்தி விடுகிறோம். கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பர். வெளிச்சுத்தம் பலதுறையிலும் எம்மால் மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அதற்கு உபகாரியாய் அமைந்துள்ளன. சுத்தம் சுகம் தரும் சுத்தம் சோறிடும் என்ற முதுமொழிகள் நல்வாழ்வோடு மிகமிக நெருக்கம் உடையன. இவ்வாறே இருதயமும் புனிதமாய் இருக்கவேண்டும். பரிசுத்த இருதயம் கிறிஸ்தவ சாதனை. உலக சுகாதார ஸ்தாபனம் சுற்றுப்புறச் சூழல் அழுக்காகாவண்ணம் முயற்சிகள் மேற்கொள்கின்றது. மனிதநலன் கருதி, ஆகாய ஓட்டைகள் அடைக்க விஞ்ஞானிகள் காரியப்படுகின்றனர். இறைவனையும் [illegible] உடல் கோவிலாகிய (மனித) உயிர்வாழ்வின் மேம்பாட்டை முன்னிட்டு செய்து மனிதருக்கும் உய்வு, ஆத்மிக விடுதலை பெறும் மார்க்கங்கள் நம்மை வழிப்படுத்துகின்றன. அறநெறியொன்று [illegible] இகபர பெருவழியில் நம்மை இட்டுச் செல்கின்றது. இதோடு கல்வி, சமூகவியல் நீதிநூல்கள், ஆத்மீகப் பெரியார்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எம்மைச் செந்நெறிப்படுத்துகின்றனர். என்றாலும் நாம் திருந்தினோமா? நாமே நம் மனச்சாட்சியைக் கொண்டு தீர்மானிக்கலாம். அறவழியில் - நீதிவழியில் - உண்மை வழியிற் சென்று நடுவு நிலைமையாளர். நாம் நல்லவர்களா? தீயவர்களா? என்று நம்மை உரசிப்பார்க்க வேண்டும். மற்றவர்கள் நம்மை நல்லவர்கள் என்றும் கூறவேண்டும். மனிதர் புனிதராக மனச் சுத்தம் தேவை. ஒழுங்கு, ஒழுக்கம், சட்டம், நடைமுறை, பழக்கவழக்கம் எல்லாமே சிறக்க மனம் செயற்படவேண்டும். அது பொல்லாத குணங்களை அகற்றி நல்ல குணங்களை மேற்கொள்ளல் நன்று. மனித விழுமியம், மனிதப்பண்பு, நாகரிகம் வழுவாமல் நம் வாழ்க்கைப்பாதை ஓட வேண்டும். தோற்றத்தால் நாம் மனிதர் ஆவதில்லை. அன்றாலும் பண்புதான் எம் [illegible]. அது அமைந்திருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

- குறள் 993

இந்த மக்கட் பண்பாலேதான் உலகம் நிலை பெறுகிறதென அவரே கூறுகிறார்.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

- குறள் 996

எனவே உலகம் பழித்ததை ஒழித்துவிடுவோம்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

- குறள் 202

நல்லார் தொடர்பு நன்று. தீயோர் தொடர்பு தீமை பயக்கும். நல்லார் இணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமும் அல்லாது வேறு நிலையுளதோ என்று பட்டினத்தடிகள் இறைவனை வேண்டுகிறார். நல்லொழுக்கம் நல்வாழ்வு அமைதியைத் தரும். இதை மேற்கொள்வதும் மனச்செல்வியைத் தரும்.

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

குறள் 131

விழுப்பம் - உயர்வு, சிறப்பு. ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்.

ஒவ்வொருவர்க்கும் தன்னுயிர் மேலானது. அந்த உயிரின் பெருமானம் ஒழுக்கத்தால் மேம்படும். எனவே உயிரினும் மேலானது ஒழுக்கம்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடபிரப்பிடிப்பனை அப்பர் வெகுவாக ஆக்காகக் காட்டுகின்றார்.

என்னிலாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னுளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே.

- திருமுறை 5:21-1

ஆக நல்லொழுக்கங்களை நடைமுறைப் படுத்த மனம் வேண்டும். இந்த மனம் வாழும் இடம் நல்லொழுக்கந்தான். எனவே மக்கள் தன் மனத்துக்கு ஒவ்வாத அசுத்தங்களையும் மனதுட்புகா மல் நன்மை பயப்பனவை வாழ்வியற் தர்மமாகக் கொள்வது மனத்தூய்மைக்கு வழிவகுப்பதாகும். மனப்புனிதமே உயரிய அறம் ஆகும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

- குறள் 34

மாசு - குற்றம். அறம் செய்பவன் குற்றம் இல்லாதவனாக இருப்பதே அறமாகும். மற்றவைகள் பேச்சுக்கள் ஆரவாரம் உடையன, பயனற்றவை.

குற்றம் - தீயன சிந்திக்கும் மனம், பொறாமை, கோபம், ஆசை, கொடுஞ்சொல் இவற்றை அறவே நீக்கித் தினமும் வாழ்வதே அறமாம்.

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

- குறள் 35

இப்படி ஒப்பிட்டுப் பார்க்கையில் புறச் சுத்தமும் வேண்டும். இதுபோலச் சாத்திரமானது அகச்சுத்தம். உட்கறை இருக்க புறக்கறை தீற்றி என்ன பயன். இதுவே மனச்சுத்தம், மனத்தூய்மை. மனத்திலே முற்றுமுழுக அழுக்குகளை வைத்துக் கொண்டு வெளியிலே நீராடி முழுகிப் பட்டாடை தரித்து, பொட்டுவைத்து அரிப்பு வைத்து என்ன பயன்! உட்புறமனதைப் பெருக்கித் தள்ளாமல். இதை வள்ளுவனார் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

- குறள் 298

நீரினாலே உடம்பு தூய்மையாவதும் சவர்க்காரம் அழுக்கை நீக்கும். ஆனால் மனத்தூய்மை வாய்மையால் உண்டாகும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

- குறள் 391

மனம், மொழி, மெய் (மனம் வாக்குக் காயம்) புனிதமாய் அமையவேண்டும். மூன்றும் முரண்படாமல் ஒன்றாயும் அமைதல் முக்கியம். உள்ளத்தில் எழுவது உண்மை. நாக்கோடு தொடர்புடையது வாய்மை, மெய்யோடு (உடம்போடு) தொடர்புடையது மெய்மை. உயர்ந்ததை சிந்தி, நல்லதைப் பேசு, நல்லதைச் செய். இவை நல்ல மனத்தின் வெளிப்பாடு. பௌத்தமும் அட்டசீலம், கிறிஸ்தவம் ஆறு கட்டளை. சைவம் பேசும் காம, குரோத, லோப, மோக, மத மாற்சரியம். இஸ்லாம் கடைப்பிடிக்கும் ஐங்காலத் தொழுகை. ஆருகதம் மேற்கொள்ளும் பஞ்சமா பாதகம் செய்யாமை (பஞ்சசீலம்). எல்லாமே மனக்கோளாறை நிவர்த்தி மனிதத் தனத்தை நிலைநிறுத்தவேயாம். அவை குறிப்பிடும் போல் வாழ்க்கைகள் எல்லாம் தவிர்த்தால் மனம் வெறுப்படையும். மற்றும் பிறன்கேடு நினையாது வாழ மனமாக அறவே அழிபவேண்டும். மற்றவர் வாழ நாம் வாழலாம். இதை உறைப்பாகச் சொன்னவர் வள்ளுவப் பெருந்தகை.

*To be altogether destitute is the proper condition of those who perform austerities; if they possess anything, it will change their resolution and bring back confusion of mind. 344*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

- குறள் 204

இதை நாலடியார் தான் கெடினும் தக்கார் கேடு எண்ணற்க என இடித்துரைக்கிறது. எனவே அறிவோம் அற்றபடி நடப்போம்.

இப்படியொரு மனவோட்டம் வரும்போது மனநோய் நிபுணர், அருளாளர் மனநோயை மாற்றுவோம். மன அழுக்கை விராணிப்பை ... கைபட்டு இந்த மனம் நீக்கிவிட்ட பாசி, மறுபடியும் கூடுவது போல மீண்டும் மீண்டும் பழைய நிலையையடையும். ஆதலால் இடையறா முயற்சியால் இறைவனைச் சிக்கெனப் பிடித்து எம்மைப் பக்தி நெறியில் வழிநடத்தினாற்றான் மனம் மணமாய்க் கமழும்.

பண்டிதமணி ஐயா அவர்கள் காதலை வேண்டும் என அடிக்கடிச் சொல்வார். தன்னைப் பேணவேண்டுமெனின் அவ்வனை ஆகிட வேண்டும். அப்போ தான் உபகாரியாக வேண்டுமாயின் பிறருக்குத் தீங்கு இழைக்கலாகாது. ஏனெனின் நாம் பிறருக்குச் செய்த அத்துணை தீங்கும் எம்மையே திரும்பவும் வந்து தாக்கும். நாம் தீண்டுமான அது நம்மைத் தீண்டும். ஒருவன் வெற்றிலை சப்பித் துப்பும்போது அத்துப்பலானம் காற்றோடு கலந்து எம்மையே தாக்குவது போல. இதுவே என்றுரைப்பர்.

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

என்பர். எனைத்தொன்றும் என்பது அணுப்பிரமாணமேனும் என்றுதான் பொருள். நான் செய்த வினையை நானே அனுபவிக்க வேண்டிவரும். எனவே நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதே என்ற விவேகானந்தர் வாக்கு இடமும் கொள்ளத்தக்கது. மனநலம், மனத்தூய்மை செய்வினைத் தூய்மை என்பவை நாம் சார்ந்து நடக்கும் இனம் (கூட்டம்)தால் ஏற்படும். எனவே நல்லவர் சேர்க்கை மனத்தூய்மையைத் தரும்.

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

- குறள் 457

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

- குறள் 455

மனத்தின் புனிதம் பலவழியாலும் பேணப்பட வேண்டும். இதற்கு இறைவழிபாடும் பக்தியும் தேவை. என்றாலும் இடையறாது சிவனைச் சிக்கெனப் பிடித்தல் வேண்டும். இம்மனக் களங்கம் எப்படியும் போகவில்லையே என முத்துமாரியிடம் முறையிடும்போது இந்த மனம் வெளுக்க வழியில்லையே எனப் பாரதியார் ஆதங்கப்படுகிறார். உலகியல் வாழ்விலே துணியை வெளுக்க சவர்க்காரமான இரசாயனப் பொருள் உண்டு. (பழைய காலத்திலே காட்டிலேயுள்ள மரங்களை எரித்துச் சாம்பலை எடுத்து (சாரமண்) வந்து ஆடைகளை வெளுத்தனர்.) தோலைத் துப்பரவு பண்ணவும் மார்க்கம் உண்டு. இரத்தினக்கல்லை (அரும்) சாணைக்கல்லில் பிடித்துப் பட்டை தீட்டலாம். பட்டை போடப் போடத்தான் பளபளக்கும் வைரம். இவற்றையெல்லாம் இப்படிப் பக்குவம் செய்யலாம். ஆனால் ஆயிமையாய் முத்துமாரி இந்த மனம் வெளுக்க வழியில்லையே என்று தவிக்கிறார் பாரதி. எல்லாவற்றுக்கும் மாற்றுவழி புண்டு. மனமொன்று கூறாமல் இந்த மனம் என்று கூறுவது கவனத்தை ஈர்க்கிறது.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

பிறவித் துன்பத்தை நீக்க முயல்கின்றவர்க்கு உடம்பே கூட அதிகப்படியாம்; அங்ஙனமிருக்கையில் அதற்கு மேலும் வேறு தொடர்புகள் எதற்கு? 345

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மனம்வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
பேதைமைக்கு மாற்றில்லை - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
அணிகளுக்கோர் எல்லையில்லாய் - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
அடைக்கலமிங் குனைப் புகுந்தோம் - எங்கள் முத்து
    மாரியம்மா, எங்கள் முத்துமாரி!

பிணி - நோய். இதற்கு வைத்தியம் செய்யலாம். (பிணிக்கு மருந்துண்டு). பேதைமை - அறியாமை. மனம் வெளுக்க வழியில்லை எனப் பாடியபோதும் இந்த மனத்தைச் சென்றிற் கழிப்பதுபோல் முடியிருக்கும் ஆணவங்களை, பந்தசொந்தங்களை நீக்கிக் கள்ளமற்ற மனதைத் தா. அல்லாவிடின் இந்த உயிர்ப்பொறுமையையே நீக்கிவிடு. என மகாசக்திக்கு விண்ணப்பம் செய்கின்றார்.

மோகத்தைக் கொன்றுவிடு - அல்லால் என்றன்
    மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு - அல்லாலதில்
    சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு - அல்லாலென்றன்
    ஊனைச் சிதைத்துவிடு
ஏகத்திருந் துலகம் - இங்குள்ளன
    யாவையும் காப்பவளே
பந்தத்தை நீக்கிவிடு - அல்லால் உயிர்ப்
    பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு - அல்லாலிதைச்
    செத்த உடலாக்கு
இந்தப் பதர்களையே - நெல்லாமென
    எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளிலுமே - உள்ளேநின்
    றியங்கி இருப்பவளே.

மோகம் - காமஇச்சை. ஆசை, தேகம் - உடம்பு, சிந்தை - மனம், ஊனை - உடம்பு, பந்தம் - பற்று. மனமே அம்பிகையிடம் என்ன கேட்கிறாய் பகுதி? மனதில் அன்பு என்னும் ஈரம் கசிந்து - குளிர்ச்சி - தண்ணளி - (கருணை) உண்டாகாதா. பொலியான ஆணவம் ஒழிந்து போகாதா. கள்ளம் கபடம் அழியவேண்டாமா. இவை போய் பக்தியெல்லாம் பெருகாது கண்ணீர் பெருகாதா. நின்கருணை வெள்ளத்தால் இந்த நாயின் வேட்கை - விருப்பம் ஒழிப்போமாதா. சொல்லுக்கரியவளே சொல்லுக்கும் அடங்காதவளே. எங்கும் நீக்கமற நிறைந்து, நிரந்து இருப்பவளே.

உள்ளம் குளிராதோ - பொய்யாணவ
    ஊனை மொழியாதோ?
கள்ள முருகாதோ - அம்மாபக்திக்
    கண்ணீர் பெருகாதோ?
வெள்ளக் கருணையிலே - இந்நாள்சிறு
    வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே - அனைத்திலும்
    மேவி யிருப்பவளே!

கள்ளங்கபடம் அற்ற, தூயமனத் தொண்டராய் வாழ்வதே புனிதமானது.

கற்சிலையைக் கழுவுவதை விட்டுவிட்டு
இதயங்களைக் கழுவுங்கள்


- குருநானக்

அழுக்கு ஆர்ந்த நெஞ்சுஉடை பேதுக்கு, ஐ
    யாநின் அருள் வழங்கின்
இழுக்கு ஆகும் என்று எண்ணி யோஇரங்
    காத இயல்பு கண்டாய்;
முழுக் காதல் ஆகி, விழிநீர்
    பெருக்கிய முத்தர் எனும்
முழுக் காணநின்று, நடம் ஆடும்
    தில்லைக் கொழுஞ் சுடரே!

- இராமலிங்க சுவாமிகள்

*What means the addition of other things to those who are attempting to cut off (future) births, when even their body is too much for them?* 345

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடவல்லான்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இறைவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிகின்றவன்; கருணை நிறைந்தவன்; இன்பமய மானவன்; எல்லா ஆற்றலும் உடையவன். ஆன்மாக்களின் பொருட்டுப் பல்வேறு திருமேனிகளை எடுத்துக்கொள்ளுகிறான். அவற்றுள் இடைவிடாது ஆனந்தத் தாண்டவம் புரியும் நிலை ஒன்று. அது ஏனைய மூர்த்திகளிலும் சிறந்தது. அந்த ஆனந்தக் கூத்து ஆன்மாக்களின் பொருட்டு ஓவாது சிவபெருமானால் நிகழ்த்தப் பெறுகின்றது. அவன் ஆடவில்லையானால், உலகத்தில் ஒன்றுமே ஆடாது. அந்தத் திருக்கூத்துக்கு முதலுமில்லை; முடிவுமில்லை; ஏனைய திருக்கூத்துக்களைப் போன்றதன்று அத்திருக்கூத்து. அற்புதத் தனிக்கூத்து அது. (சேக்கிழார் சுவாமிகள் கூறியருளினார்).

"ஆதியும் முடிவு மில்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்)"

ப-பாவம்; ர-ராகம்; த-தாளம். பாவராக தாளம் என்ற மூன்றும் ஒன்று கூடியது பரதம். இந்த பரதக்கலை, நடராஜப் பெருமானிடமிருந்து தோன்றியது. "அன்பர் சின்பத் திறமுதவு பரத குரு" என்கின்றார் அருணகிரிநாதர். இனி பரதநூல்கள், தாண்டவம் நூற்று எட்டு என்று கூறுகின்றன. சிவாகமங்களும், சிவதாண்டவம் நூற்று எட்டு என்று கூறியிருக்கின்றன.

நடராஜ மூர்த்தியைப் பற்றித் தியான சுலோகம் அடியில் வருமாறு காண்க.

த்ரிநேத்ரம் சதுர்ப்புஜம் சாந்தம் ரக்த வர்ணம் ஸ்மிதாநநம்।
கரோட பகபத்ரஞ்ச சார்க்க புஷ்பகம்!।
கங்கா சந்த்ர ஸமாயுக்தம் அபஸ்மாரோ பரிஸ்திதம்।
தக்ஷிணம் குஞ்சிதபாதம் வாமபாதந்து உத்ருதம்।
ஸவ்யந்து பூர்வமபயே அந்யே டமருகந்ததா!
வாமஹஸ்தேது டோளந்தம் இதரம் அக்நி பாத்ரகம்।
வாமகர்ணேது பத்ரஞ்ச தக்ஷிணேநக்ர குண்டலம்।
அபிபஷணைர் யுக்தம் ஸர்வாங்கே பத்மதாரிணம்।
ஏவம் நடேச மிக்கயுக்தம் த்யாத்வா மந்த்ரேண பூஜயேத்.

இதன் பொருள்:-

நடேசப் பெருமானுடைய திருவுருவம், மூன்று கண்களும், நான்கு தோள்களும், சாந்த முடையும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாயும்; தலையின் ஓடும், கொக்கின் இறகும், ஊமத்தையும், எருக்கும், கங்கையும், நிலவும் ஆகிய இவர்களைத் தலையில் அணிந்ததாயும்; வலப்பாதம் அபஸ்மார (கீழ்ப்பட்ட) முயலகன் மீது ஊன்றி நிற்பதாயும்; இடப்பாதம் தூக்கப்பட்டு சற்று குஞ்சித்ததாயும்; வலக்கரங்களுள் முன்கரம் அபயம் அளிப்பதாயும்; பின்கரம் டமருகம் தாங்கியதாயும்; இடக் கரங்களுள் முன்னது வீசித் தொங்கவிட்டுள்ளதாயும்; பின்னது நெருப்பை ஏந்தியதாயும்; இடச்செவியில் திருத்தோடும் வலச்செவியில் மகரகுண்டலமும் அணிந்ததாயும்; அபயகரத்தில் நாகாபரணம் பூண்டதாயும்;

யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.
உடம்பைத் 'நான்' என்றும், தொடர்பு இல்லாத பொருளை 'எனது' என்றும் கருதுகின்ற மயக்கத்தைப் போக்குகின்றவன், தேவர்க்கும் கிட்டாத உயர்ந்த வீட்டுலகத்தை அடைவான். 346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வாங்கத்திலும் திருநீறு தரித்து நிலைபெறுவதாயும், மேல் காட்டப்பட்ட சிவமந்திரத்தாற் பூசிக்கற்பாலது.

ஆனந்த தாண்டவ வடிவம், தென்னாட்டிலே சிறப்பாக விளங்குகின்றது. எனினும் வடநாட்டிலும் காணப்படுகின்றது. சாளுக்கிய அரசர்களது தலைநகராயிருந்த வாதாபி நகரத்தின் குகைக் கோயிற் சுவரில் பதினாறு கரங்களுடைய ஒரு சிவதாண்டவமூர்த்தம் செதுக்கப்பட்டிருக்கின்றது. இக்குகை செய்யப்பட்ட காலம் கி.பி. 578ம் ஆண்டெனக் கருதப்படுகின்றது. பல்லவ அரசர் காலத்தில் காஞ்சிபுரத்தில் எழுப்பிய கைலாசநாதர் கோயிற் சுவரிலும் (கி.பி. 675) நடராஜ வடிவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. ஆரியபுரம் என்னும் சாளுக்கிய நாட்டு நகரிலுள்ள, பத்துக் கரங்களையுடைய ஒரு நடராஜ வடிவம் உள்ளது. எல்லோரா குகைக் கோயில்களிலும், நடராஜ வடிவங்கள் இருக்கின்றன.

இனி எல்லாக் கோயில்களிலும் நடேசவுருவம் பொதுவாக அமைந்திருந்த போதிலும், சிறப்பாக உள்ளதாகிய திருத்தலம் தில்லைச் சிதம்பரமாகும்.

## சிதம்பரம்

சிதம்பரம் மிகப் பழைய கோயில். அதற்குக் "கோயில்" என்றே பெயர். அங்கேதான் சிவலிங்கம் திருமூலநாதர். பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாதரும், தேவரும், மூவரும் வழிபட்டு அருள்பெற்றார்கள். அத்தலத்தில் வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர் வேண்டிட, சிவபெருமான் திருநடனம் புரிந்தருளினார். அந்நடனம் ஆனந்தத் தாண்டவம் அல்லது நாதாந்த நடனம் எனப்படும். இந்த நடனத்தின் தத்துவத்தைத் தவயோக சித்தர்களே அறிவர்.

மாலாங்கனே இங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேன்.

என்று திருமூலர் கூறுகின்றார். திருமூலருடைய திருமந்திரத்திலே ஒன்பதாந் தந்திரத்திலே, "திருக்கூத்துத் தரிசனம்" என்ற தலைப்புளது. அது நாதாந்த நடனத்தின் உண்மையை நன்கு விளக்குகின்றது. நடனத்தைக் கண்டுகளித்த பதஞ்சலி முதலியோருடன், சித்த சிகாமணியாக விளங்கிய திருமூலரும் ஒருவர் என அவர் பாடலால் தெளிவாகின்றது.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே.

இதனால் பதஞ்சலி முனிவர், நந்தி அருள் பெற்ற சித்தருள் ஒருவர் என்பதும் புலனாகின்றது.

இறைவன் ஞானக் கண்ணைத் தர, தில்லை மன்றுள் அம்பலவனது திருநடனத்தைப் பதஞ்சலி முதலிய சித்தர்கள் கண்டு இன்புற்றார்கள்.

**விண்ணவரும் காதல்கூரும் இருவரும் காண ஞானக்**
**கண்ணிலை நல்க முன்னைக் கரிருள் கழிவுற் றின்ப**
**வண்ணமென் றறிய வாரா வொளிரொளி மன்றுள் மாதோ**
**டண்ணல்நின் றாடு கின்ற ஆனந்த நிருத்தம் கண்டார்.**

- கோயிற் புராணம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சித்தர்

சித்தாந்தச் செந்நெறியில் நான்கு படிகள்: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் சிவயோக நெறி நின்று ஞானம் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள். சிவமூர்த்தி யோகியருள் மகாயோகியாவார். சடாமுடியும், யோக தண்டமும், கமண்டலமும், புலித்தோலும், கோவணமும், கபாலமும், வெண்ணீறும், உருத்திராக்கமும் என்றிவை யோகிகளுடைய சின்னங்களாகும். இவைகளையுடைய மூர்த்தி சிவமூர்த்தி.

*He who destroys the pride which [illegible] will enter a world which is even above the gods.* 346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள், ஞானசித்தர்கள், நாதசித்தர்கள், ரசேஸ்வர சித்தர்கள் என மூன்று பிரிவினராவார்கள். உண்மையான ஞான நிலையில் நின்றவர் ஞான சித்தர்; பிராணாயாம யோகப் பயிற்சியால் சுழுமுனை நாடியில் உள்ள நாதத்தில் தம் மனத்தை ஒடுக்கி சமாதிநிலையில் நின்றவர் நாதசித்தர். ரசாயன முறையால் காயசித்தி அடைந்தவர் ரசேஸ்வர சித்தர். இந்த ரசேஸ்வர சித்தர்கள் வைத்திய ரசாயனம் முதலிய நூல்களைச் செய்தார்கள்.

ஞானசித்தர்கள், சுத்த சன்மார்க்க சித்தர்கள் எனவும் அழைக்கப்பெறுவர். அகத்தியர், அகப்பேயர், திருமூலர், பாம்பாட்டியார், கடுவெளியார், இடைக்காடர், கருவூரார், சிவவாக்கியர், திருவெண்காடர், பத்திரகிரியார், அருணகிரியார், திருமாளிகைத்தேவர் என்ற சான்றோர்கள் ஞானசித்தர்கள் ஆவார்கள்.

அனாதிநாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், மச்சேந்திரநாதர், சத்தியநாதர், மதங்கநாதர், வகுளிநாதர் என்பவர்கள் நவநாதசித்தர்கள். "ஆகையில் நவநாதரும்" என்று அருணகிரியார் திருப்புகழில் கூறியுள்ளனர். "சொல்லின் முடிவில் முடியாத பதி புருடர் நவநாதர்" என்று திருப்புகழ் வாக்காலும் அறிக.

இங்ஙனம் வந்த சித்தர் மரபு, தாயுமானார் காலம்வரை தமிழ்நாட்டில் சிறப்பாகச் செழித்திருந்தது. தாயுமானாருடைய குருநாதர் திருமூலர் திருமரபில் வந்தவர் என்று தாயுமானாரே "மூலன் மரபில் வரு மௌனகுருவே" என்று கூறுதலாலும் அறிக.

## பதஞ்சலி முனிவர்

சிவயோகச் செந்நெறியில் நின்ற, பழைய சித்தர்களுள் ஒருவர் பதஞ்சலி முனிவர். இவர் மகத நாட்டினின்றும் தில்லைவனம் வந்து, அரிய பெரிய தவஞ்செய்து, இறைவன் திருவருளால் நாதாந்த நடனத்தைத் தமது சிவஞான யோக வலிமையினாலே அகக்கண் கொண்டு கண்டு களித்தவராவர். அத்திருக்கோலந்தான் தில்லை ஞானவெளியில் உள்ள நடேசருடைய திருவடிவம்.

## நாதாந்த நடனம்

ஞான மாத்திரையாய் நிற்கும் பரமசிவம் புடமாய், துணைதீரமாய், பிரபஞ்சங்களுக்குள் விளங்கும் பஞ்சேந்திரியங்களுக்கு உள்ள பொருளாகும். அச்சிவத்தினது தத்துவாதீதமான அத்துரிய நிலையில் எச்செயலும் நிகழ்வதில்லை. அக்காரணத்தினால் அது சுத்தசிவம் என்றும், பரமசிவம் என்றும் பேசப்பெறும். அந்நிலை மனத்தால் நினைக்கவும், வாக்கினால் பேசவும், கண்ணினால் அளக்கவும் இயலாதது.

"வாசித்துக் காணொணாதது பூசித்துக் கூடொணாதது
வாய்விட்டுப் பேசொணாதது நெஞ்சினாலே
மாசிக்குத் தோணொணாதது நேசர்க்குப் பேரொணாதது
மாயைக்குச் சூழொணாதது விந்துநாத
ஓசைக்குத் தூரமானது மாகத்துக் கீறதானது
லோகத்துக் காதியானது"

"காணொணாதது உருவோடருவது
பேசொணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்
காய பாசம தனிலே புறைவது
மாயமாயுட லறியா வகையது
காயமானவ ரெதிரே யவரென வந்துபேசிப்
பேசொணாதது வெளியாய் ஒளியது
மாயனா மறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்
பேருமாய்க் கலையறிவாய்த் துரியவ தீதமானது"

"சரியையாளர்க்கு மெய்க் கிரியையாளர்க்கு மச்
சகல யோகர்க்கு மெட் டரிதாய
சமயபேதத்திலுக் கறுகொணா மெய்ப்பொருட்
டருபராசத்தியில் பரமான
துரிய மேலற்புதப் பரமஞானத் தனிச்
சுடர்வியா பித்தநற் பதி."

> பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
> பற்றி விடாஅ தவர்க்கு.
>
> நான், எனது, என்னும் இருவகைப் பற்றுகளையும் இறுகப் பற்றிக் கொண்டு விடாதவரைப், பிறவித் துன்பங்களும் இறுகப் பற்றிக் கொண்டு விடுவதில்லை. 347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாதி பலவாறு திருப்புகழால் எங்கள் கருணைக்கடலான வள்ளலாகிய அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தனிப் பரம்பொருளாகிய அப்பரசிவம், புறப் பொருள்களைத் தன்னோடுடன் சேர்க்கும் நிலையில் பராசக்தி எனப்படும். அதனால் சிவத்தின் அருள்நிலையே பராசக்தியாகும் என்று அறிக. தீயும் சூடும் போலப் பரசிவமும் பராசக்தியும் ஒன்றிப் பொருந்துவனவுணர்க. பரசிவமாகிய ஞானநிலையும், பராசக்தியாகிய அருட்செயல் நிலையும் ஒரே பொருளின் இரு தன்மைகளாகும். பராசக்தியும் ஞானசொரூபமேயாகும்.

பராசக்தியானது மறைத்தலினிமித்தம் தன் சுத்த ஞான நிலையினின்றும் நீங்கி, உயிர்களுக்குத் தனுவாதிகளைத் தோற்றுவித்து, மலபரிபாகம் வரும் பொருட்டுப் பிறப்பு இறப்புக்களை நல்கி, கன்மங்களை நுகர்வித்து, மறைத்தல் தொழிலைச் செய்வித்து, ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் திரோசக்தியாக மாறுமிடத்து, அது திரோதானசக்தி யென்று சொல்லப்பெறும். அதுவே இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியென மூன்றுபட்டு நின்று வியாபரிக்கும்.

உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தருள இரங்கும் நிலை இச்சாசக்தி. அங்ஙனம் உயிர்களின்மேல் இரக்கங்கொண்ட பின்னர், அவை சிவத்தைச் சார்வதற்கு வேண்டப்படும் உபாயங்களை அறியுநிலை ஞானசக்தி. இவ்வாறாய்ந்தவைகளைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்றவைகளை நடத்தும் நிலை கிரியாசக்தி.

சிருட்டியாரம்பத்தில் பரசிவம் தனது துரிய ஞானத் தனி நிலையை விடுத்து அசைந்து, பராசக்தி நிலையை அடைகின்றது. அப்பராசக்தியினது நிலையும் தூய ஞான நிலையேயாயினும், அந்நிலை உயிர்களைக் குறித்த நினைவு தோன்றுமிடமாமென அறிக. அப்பராசக்தி திரோதாயி யெனப்பட்டு, உயிர்களின் பொருட்டு சிருட்டியாதிகளைச் செய்யும் பொருட்டு வியாபரிக்குங்கால், ஞானசக்தியாய் வியாபரிக்கும். அவ் வியாபாரமே பரநாதம் எனவும், சிவதத்துவம் எனவும் கூறப்படும்.

இதனால், உயிர்களின் பொருட்டுப் பரசிவம் பராசக்தியை அதிட்டித்துத் தொழிற்படுவதே சிருட்டியாரம்பம் என்பது அறியப்படும். எனவே பரம்பொருளாகிய சிவம் சிதாகாசமாகிய பராசக்தியிடம் எழுப்புவதே சிதாகாசத்துள் எழுகின்ற முதல் அசைவாம் என்பதும் புலனாகும்.

பரசிவம், சக்தியினது ஒரு கூறாகிய ஞான சக்தியோடு கூடித் தொழிற்படும்பொழுது, சிவதத்துவம் தோன்றும்; அதிலிருந்து சக்தி தத்துவம் தோன்றும். அச்சக்தியிலிருந்து நாதம் பிறக்கும்; அதுவுமே அபரநாதம் எனப்படும்; அந்நாதத்திலிருந்து விந்து தோன்றும்; அவ் விந்துவே அபர விந்து எனப்படும். இதனை,

"சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசக்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்"

என்று திருமூலர் திருவாக்கினானுந் தெளிக.

சிவ தத்துவத்தில் சக்தியிருக்குமேனும், சிவ ரூபமாகிய ஞானமே சிறந்து விளங்கா நிற்கும். சக்தி தத்துவத்தில் சிவம் இருக்குமேனும், சக்தியினது இயல்பாகிய கிரியையே முனைந்து விளங்கும். சிவன் தனது சக்தி சங்கற்பத்தால் அருளினான் உருவப் பிரபஞ்சத்தைப் பஞ்ச கிருத்தியப் படுத்துபவன்.

பரம காரணமான அதீத நிலையில் பரசிவம் பராசக்தியோடுங்கூடி அசைவுறுதலே நாதாந்த நடனம் ஆகும்.

நாதாந்தம் என்பது, நாத அந்தம் எனப் பிரியும். நாத தத்துவத்தின் முடிவு எனப் பொருள்படும். நாதம் தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் தலைமையது என்பது மேலே கூறியவற்றால் அறிக. இங்கு நாதம் என்பது பரநாதமாகிய சிவதத்துவமென்பதும் அறிக. "நாதமுடிவான வெளியிலே நீயும் நானுமாய் நிற்கு நாள் உளதோ" என்பர் பட்டினத்தார்).

*Sorrows will never let go their hold of those who give not up their hold of desire.* 347

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாதாந்த நடனத்தினையே, சபாநாதீதப் பழம்பொருளாகிய ஏகநாதன், தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் தனது நடராஜத் திருவுருவத்தால் வெளியே விளக்கிக் காட்டுகின்றனன். நடராஜப் பெருமான் தன் ஆனந்த மேலீட்டினால், ஆன்மாக்களின் மீதுள்ள தம் கருணையையே தனது அருள் திருமேனியாகக் கொண்டு, எந்நாளும் இடையறாது நின்று நிகழ்த்தும் அப்பொற்புறு நடனமே தில்லைத் திருநடனமாகும். பரசிவம் பராசக்தியை நோக்குதல் உயிர்களுக்குச் சிருட்டியாதிய விளைவும் பொருட்டே எனவுணர்க. இதனையே "மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே...... அற்புதத் தனிக்கூத்தாடும் நாதனார்" என்று தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றனர்.

சிதாகாசமாகிய பெருவெளியிலே, பரம்பொருள் பராசக்தியை எழுப்பி ஆடும் அவ்வாடலே, ஆன்மாக்களுக்குத் தநு கரண புவன போகங்களைப் படைத்துக் கொடுத்ததோடு, முத்தியின்பத்தையும் வழங்குகின்றது. எனவே நாதாந்தமாகிய அந்த அருள் நடனம், உலக உயிர்கள் யாவும் உய்வதற்குக் காரணமாகும் என்பதையுணர்க. பரநாத தோற்றமே சிருட்டியாரம்பம்; அதன் ஒடுக்கமே சங்காரம். இத் தத்துவத்தைப் புலப்படுத்த எந்தத் திருக்கோயிலில் உள்ள பள்ளியறை பரசிவம் ஐந்தொழில் நிகழ்த் தன்னிற் பிரிவிலாத பராசக்தியை நோக்குதல் என்ற உண்மையை, உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டே அங்கு அமைந்தது என்பதைக் [illegible] உணர்வார்.

அம்பலம்: நடராஜ வடிவம்; ஐம்பெருந் தொழில்களைக் காட்டுவதுமன்றி, இவ்வைம்பெருந் தொழிலுக்கும் அதீதமாயுள்ள பேரின்ப நிலையையும் குறிக்கும். சிவபரம்பொருள் போக நிலையில் இருந்து ஆன்மாக்களுக்குத் தநுகரணாதிகளைக் கொடுத்தல் ஊன நடனம் எனப்படும்; அது ஆன்மாக்களுக்குப் பெத்த நிலை அறிவிக்குந் தொழில் அதிருக்கும் நடனம் எனப்படும்; ஆன்மாக்கள் பந்தத்தினின்றும் விடுபட்ட முத்தி நிலையில் அநுபவிப்பது பரதநடனம் அல்லது ஞான நடனம் எனப்படும்.

எனவே ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்தியத்தை மாத்திரம் காட்டுவதன்று; அது நின்மல துரிய நிலையில் உண்டாகும் அருள் விளக்கத்தையுங் காட்டி, அதற்கப்பால் உள்ள துரியாதீதத்துச் சிவபோக ஆனந்த நிலையையுங் காட்டுவதாகும். மெய்ஞ்ஞானமாகிய அருள் விளக்கமே மெய்யுணர்வாகும்.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என்பர் திருவள்ளுவர்.

இந்த மெய்ஞ்ஞான அருள் விளக்கத்துக்குப் பின் நிகழுற நிற்குந் திருக்கூத்தே சிவபோகமாகும். இதனைச் சேக்கிழாரன்றி வேறு யாரால் விளக்க முடியும்? சிவபோக சிகாமணியாகிய திருமூல நாயனாரது அநுபவப் பேற்றைக் கூறுமிடத்து இதனைக் கூறுகின்றார்.

எவ்வுலகும் உய்ய எடுத்தருளிய சேவடியாரைச்
செவ்விய அன்புற வணங்கிச் சிந்தை களிவரத் திளைத்து
வவ்விய மெய்யுணர் வின்கண் வரும்ஆ னந்தக் கூத்தை
அவ்வியல் பிற்கும் பிட்டங் காராமை யமர்ந் திருந்தார்.

சிவயோக விளைவாம் திருக்கூத்தைக் கண்டு திளைத்த சித்தருள் ஒருவராகிய திருமூல நாயனார், தமது திருமந்திரத்தில் இப் பேரின்பத் திருநடனத்தின் உட்பொருளை, மிகவும் சிறப்பித்து விளக்கியருளினார்.

பரம்பொருளாகிய சிவம், ஆன்மாக்களின்மீது வைத்துள்ள கருணையே தமது உருவாகக் கொண்டு, பராபரையின் திருமுன் ஆனந்தத் திருக்கூத்தை இயற்றுகின்றார் என்ற தத்துவத்தைக் கூறுகின்றார்.

அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பால்
உண்டென் றசத்தி சதாசிவத் துச்சிமேல்
கண்டங் கரியான் கருணைத் திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பரானந்தக்கூத்து நிகழ்வதற்குரிய இடம் பேரின்ப நிலையாகிய துரியமே என்பதைக் கூறுகின்றார்.

தெற்கு வடக்குக் கிழக்கு மேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில் பேரின்பத் துரிய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே.

இப்பேரின்ப உபயத்துள் நிகழ்வதாகிய நடனத் திற்கு அம்பலமாக அமைந்துள்ளது பராசக்தி யேயாம் என்பதைக் கூறுகின்றார்.

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சக்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே.

அத்திருக்கூத்தைக் கண்கூடாகக் காணவல் லவர் மாயை கடந்த மாதவரேயாவர்.

தீமுதல் ஐந்தும் திசையெட்டும் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயகன் நின்று நடஞ்செய்யு மாறே.

அப் பரமானந்தக் கூத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும், புளகமுங் கண்ணீர்ச் சிந்த நாவில் நீர் ஊறுவதுபோல உள்ளத்தே ஆனந்த அருவி பாயும்: சிவ போக விளைவே அத் திரு நடனம்.

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாப்போல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே.

நாதாந்த நிலையிலே நின்று நம்பன் நடிக்கின்ற தனாலே அகில சராசரம் யாவும் ஆடுகின்றன.

தேவர்சுரர் நரர் சித்தர் வித்தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே.

மேலும் சிவயோகமாகிய முத்தி முடிவைக் குறித்தலோடு சிவபரம்பொருளே ஆக்கல் அளித் தல் மறைத்தல் அருளல் என்ற ஐந்தொழிலை யையும், அயன் அரி உருத்திரன் மகேசன் சதா சிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்கின்றது என்பதைக் காட்டும் தன்மை துலங்கத் தங்குமாறு அமைந்துள்ள திருவுருவமே நடராஜ வடிவமாகும்.

அவருடைய திருக்கரத்தில் விளங்கும் உடுக்கை (டமருகம்)யினால் உலக சிருஷ்டியை யும், அபய கரத்தினால் காத்தலையும், நெருப்பை ஏந்திய திருக்கரத்தினால் அழித்தலையும், ஊன் றிய திருவடியால் மறைத்தலையும், தூக்கிய திருவடியால் ஆன்மாக்களுக்கு அருளையும் இத்திருவுருவம் காட்டுகின்றது.

இதனை "உண்மை விளக்கம்" என்ற சித்தாந்த ஆசிரியர் மனவாசகங் கடந்தார் கூறுகின்றார்.

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே.

\- திருமந்திரம்

ஆனந்த நடனம் செய்பவனே ஆண்டவன். மாயை யை எடுத்து அப்படி உடுக்கையினால் உதறு கின்றார். ஆன்மாக்களின் பழவினைகளை - சஞ் சிதத்தை - தமது திருக்கரத்தில் உள்ள நெருப் பில் சுட்டுச் சாம்பலாக்குகின்றார். ஆணவமாகிய முயலகனை பேரொளிவண்ணம் கிரியா சக்தி யாகிய வலப்பாதத்தினால் மிதித்திருக்கின்றார். ஆனந்த அநுபவத்தை ஞான சக்தியாகிய தூக்கிய திருவடியினால் தந்து ஆன்மாக்களைப் பேரின்ப

*Those who have entirely renounced (all things and all desires) have obtained (absorption into) God; all others wander in confusion, entangled in the net of (many) births. 348*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகரத்தில் அழுத்துகின்றார். இதுவே அரை செய்யும் பரத நாட்டியத்தின் உட்பொருள்.

இனி நடராஜவடிவம் பஞ்சாட்சரத்தால் அமைந்ததும் ஆகும். அதனை அறிந்து தியானிப்பதும், முன்னை சாதகர்களுக்குக் கூறப்பட்ட முறைகளும் ஒன்றாகும்.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்ந்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

இதன் பொருள்:

"மடவைப்பெண்ணே! பொன்னம்பலமுனை ஈசன் திரு நடனஞ் செய்கின்ற முறையைச் சொல்லுகின்றோம். கேட்கக் கடவாயாக.

நின்ற பாதத்திலே - ந
திருவுந்தியிலே - ம
திருத்தோளிலே - சி
திருமுகத்திலே - வா
திருமுடியிலே - ய

இந்த வண்ணம் எம்பிரான் ஐந்தெழுத்தையும் உருவமாகக் கொண்டு ஆடுகின்றான் என்று அறிக. இது தூல பஞ்சாக்கரம்.

அன்றியும் சூக்கும பஞ்சாக்கர வகையாலும் அம்பலவனது தாண்டவவுருவம் பேசப் பெறும்.

சேர்க்குந் துடிசிகரம் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

மருவுந் துடியுடன் மன்னிய வீச
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே.

ஒலிக்கின்ற உடுக்கை - சி
வீசிய கரம் - வா
அமைத்த கரம் - ய
அனலேந்திய கரம் - ந
முயலகனை மிதித்த பதம் - ம

இத்தகைய அருளமைந்த அற்புதக் திருக் கூத்தை, உள்ளத்தில் நாடி அலைகின்ற மனத்தை ஒடுக்கி, உள்ளொளியைப் பெற்று உய்தல் வேண்டும் என்கிறார் திருமூலர்.

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியுள்ளே கண்டு தீர்ந்தற்ற வாறே.

இதுகாறும் கூறிய விளக்கத்தினால், நாதாந்த நடனமென்னும் ஆனந்தக் கூத்தால் உலகில் காணப்படும் அசைவுகள் யாவும் அவன் தன் அருளாலே செய்யும் ஆணையினாலே நிகழ்கின்றன என்பதும், அற்புதமான நிகழ்ச்சியானது ஆன்மாக்கள் தம்முடைய இன்பங்களுக்கு காரணமான பந்தத்தினின்றும் நீங்கிப் பேரானந்தத்தைத் தாகிய முத்தியின்பத்தைப் பெறும் பொருட்டே நிகழ்கின்றதென்பதும், அத்திருக்கூத்து நடைபெறுமிடம் தாமரைமலர் போன்ற பொற்சபையாகிய திருக்கோயிலும், சூக்குமமாகிய நகராலயம் எனப்படும் அன்பர்களது இதய கமலமும் ஆகும் என்பதும் இனிது புலப்படும்.

இத்தகைய தத்துவங்களைத் தெளிவுறக் காட்டும் திருவுருவம் நடராஜ வடிவினையன்றி வேறு ஒன்றும் இல்லை. இதனை நமக்கு உணர்த்திய ஆன்றோர்களின் மதிநுட்பம் அதிநலம் உடையதாகும். நடராஜ வடிவினைச் சூழ்ந்த திருச்சுற்று திருவாசி ஓங்காரமாகும். இத்தகைய திருவுருவம் சிறப்பாக விளங்குவதனால் தில்லை

[illegible] 389

யைத் தெரிசித்த மாத்திரத்தில் முத்தியென முந்தையோர் மொழிந்தனர். அதுபோது நடராஜ வடிவத்தால் விளங்கும் சிவபோத நிலையைத் தரிசித்த மாத்திரத்தால் முத்திபெறலாம் என்பது போதரும்.

அதனால் இத்தில்லை நடராஜவடிவினைக் காணும் வாய்ப்புக் கிடைக்குமாயின், மண்ணுலகில் மனிதப் பிறப்பு மற்றொரு முறைவந்தாலும் குறைவில்லை என்கின்றார் அப்பர் மூர்த்திகள்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

அன்பால் வந்த அடியார்களை "என்று வந்தாய்!" என்று கருணையுடன் கேட்பது போலவும் இருக்கின்றது தென்பால் நோக்கியாடும் தில்லைப் பரமனது அபய கரத்தின் குறிப்பு.

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
"என்று வந்தாய்!" எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே.

இனி "எல்லாமாய் நின்ற எம்பிரானாகிய அம்பலக் கூத்தனைத் தினையளவு நேரமேனும் நான் மறந்து உய்யமாட்டேன்" என்கிறார் அப்பர்.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ.

> செல்வம்வந் துற்றபோது தெய்வமுஞ் சிறிது பேணார்
> சொல்வதை யறிந்துசொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்
> வெல்வதே கருமமல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
> வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்.
>
> உலகத்தில் வாழும் மானிடர்களுக்குச் செல்வமானது மிகுதியாக வந்து சேர்ந்தபொழுது, கொஞ்சமேனும் தெய்வத்தையும் கருதார். எதையும் ஆராய்ந்து பதில் சொல்லார். உறவினர்களையும் நண்பர்களையும் மதியார். எக்காரியத்திலும் வெற்றியையே கருமமாகக் கருதுவாரேயல்லாமல், வெவ்விய பகைவனுடைய வலிமையை எண்ணார்கள். கொடிய பாவ விளைவையும் பாரார்கள்.
>
> - விவேகசிந்தாமணி

இத்தகைய திருக்கூத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் தரிசித்தபோது, அவருக்கு நிகழ்ந்த அநுபவத்தின் சிறப்பினைச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விதமேயாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

கருணையே உருவமாகிற கனகசபாபதியின் நடனத்தின் பெருமையை, வேதசிவாகமங்களே முழுவதும் உணர்ந்தில என்றால், எம்போன்றோர் எங்ஙனம் உணர்வர்? ஏதோ அவன் அருள் உணர்த்தியவாறு சிறிது வரைந்தோம். அன்பர்கள் அனைவரும் ஆனந்த நடனம் புரியும் அம்பலவாணனை, இன்னும் பல யோனியில் பயிலாதிருக்கத் தொழுது இறைஞ்சி இன்னருள் பெறுவார்களாக.

[illegible]

# குமரகுருபரர்

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்திலே, தாமிரபரணியாற்றின் கரையில் வைகுண்டமென்று வழங்குகிற கைலாசபுரம் என்னும் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்ச் சண்முக சிகாமணிக் கவிராயர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவருடைய மரபு சைவ வேளாளர் குலம். அவர் இல்லற வொழுக்கத்திலே சிறந்து தவறாது வாழ்க்கை நடத்திவந்தார். அவருடைய வாழ்க்கைத் துணைவியின் பெயர் சிவகாமசுந்தரி. நீண்ட நாளாகியும் அவர்களுக்கு மகப்பேறில்லை. அதனால் அவர்கள் திருச்செந்திலில் எழுந்தருளிய செவ்வேளை மிகுந்த அன்புடன் வழிபட்டுப் போற்றிக்கொண்டிருந்தனர். முருகன் திருவருளால் ஓர் ஆண்மகவு பிறந்தது. தாய் தந்தையரிருவரும் அளவிலா மகிழ்ச்சியுடன் அவ்வருமைக் குழந்தையைப் போற்றி வளர்த்து வந்தனர். அக்குழவிக்கு ஐந்தாண்டும் நிரம்பியது. ஆயினும் அக்குழந்தை வாய் திறந்து ஒரு மொழியும் உரைக்கவில்லை. அதனால் அக் குழந்தை ஊமையென்று தாய் தந்தையர் எண்ணிப் பெரிதும் வருந்தினர். முருகக்கடவுளைக் குறித்துப் பலவகை வழிபாடுகளும் நடத்தினர்.

ஒருமுறை குழந்தையுடன் அறுமுகவள்ளல் அமர்ந்தருளும் திருச்செந்தில் மாநகரையடைந்தனர். அப்பெருமானை வழிபட்டுத் தம் புதல்வனின் ஊமைத்தன்மையை நீக்கிப் பேசவைத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அங்குள்ள சண்முகவிலாசம் என்னும் மண்டபத்தில் தங்கியிருந்தனர். கவிராயர் தமக்கு ஊமைப் பிள்ளை பிறந்திருப்பது இழிவு என்று எண்ணினார். ஆகையால் ஒரு மண்டலத்திற்குள் மைந்தனுக்கு ஊமைத்தன்மை நீங்காதொழியுமாயின் மனைவியுடன் உயிர் விட்டுவிடுவேனென்று உறுதி செய்துகொண்டு முருகக்கடவுளை முக்காலமும் போற்றிக்கொண்டிருந்தார்.

அவ்வாறிருக்கும்போது ஒரு மண்டலமும் ஆயிற்று. கவிராயர் உயிர்விடுவதாக எண்ணியிருந்த தினமும் நெருங்கியது. அந்நாளில் ஞாயிறு தோன்றுவதற்கு ஒரு சாமம் இருக்கையில் முருகக் கடவுள், பூசனை புரியும் வடிவங்கொண்டு குழந்தை படுத்திருந்த இடத்தில் எழுந்தருளினார். குழந்தையைக் "குமரகுருபரா" என்று தட்டியெழுப்பினார். குழந்தையும் விழித்தெழுந்தது. அதனுடைய நாவிலே ஆறெழுத்தை எழுதிவிட்டு "நம்முடைய வழிபாட்டிற்கு வருவாயாக." என்று கூறி மறைந்தருளினார். உடனே அக்குழந்தை தாய் தந்தையர்களைத் தட்டியெழுப்பி, "அம்மா அப்பா" என்று அழைத்து நடந்த செய்திகளையெல்லாம் நவின்றது. தாய் தந்தையர்களிருவரும் தம் மைந்தனுக்கு முருகக் கடவுள் அருளிய பேரருளை யெண்ணி யெண்ணி வியந்து மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தனர். முருகன் திருவருளைப்பெற்ற குழந்தையோ அப்பெருமானைப் போற்றிக் 'கந்தர்கலிவெண்பா' என்னும் ஓர் அரிய சிறுநூலை அப்பெருமான் மீது பாடியருளியது. மூவரும் உவர்நீர்க்கடலில் நீராடி முருகனைப் போற்றி இன்பக்கடலில் இனிது திளைத்து நின்றனர். அன்றுமுதல் அக்குழந்தையைக் 'குமரகுருபர அடிகள்' என்று அனைவரும் போற்றலாயினர். குமரகுருபர அடிகள் மெய்யறிவு மிகவும் கூடப்பெற்றார். எனவே, தக்க ஆசிரியரைப் பெறவேண்டுமென்று அப்பெருமானைப் போற்றி

[illegible]

நின்றார். "நீ பல இடங்களுக்கும் செல்வாயாக! உன்னுடைய வாக்கு எவரால் தடைபடுகிறதோ அவரிடத்தில் மெய்யறிவு பெறுவாயாக!" என்று முருகக்கடவுள் உடலற்ற வாக்காக உரைத் தருளினார். குமரகுருபரரும் முருகவேளைப் போற்றித் தாய்தந்தையர்களுடன் கைலாசபுரத்தையடைந் தார். சிலகாலஞ் சென்றபின் தாம் சிவத்தலங்க ளுக்குப் பயணஞ் செய்ய விரும்புதலைத் தாய் தந்தையர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் மைந்தனைப் பிரிய வருந்தினர். குமரகுருபரர் அவர்களைத் தேற்றி மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

புறப்பட்டு வரும்வழியில் தாமே மதுரையிலே எழுந்தருளியுள்ள அங்கயற்கண் அம்மை மீது ஓர் அரிய பிள்ளைத் தமிழ் நூலைப் பாடிக்கொண்டு வந்தார். குமரகுருபரருக்குப் பிறகு மற்றுமோர் ஆண்குழந்தை சண்முகசிகாமணிக் கவிராயருக் குப் பிறந்தது. அக்குழந்தைக்குத் தந்தையார் தாமே இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். அச்சிறுவரும் இறைவனருள் பெற்ற ஒரு பெரியா ரின் இளவலாகப் பிறந்த காரணத்தால் எளிதாகக் கல்வியைக் கற்றுப் புலமையடைந்திருந்தார். அவருடைய பெயர் குமாரகவிகளென விளங்கி நின்றது. அவரும் அடிகளாருடன் உடனுறைந்து அவர்கள் பாடல்களை எழுதுவது, படிப்பது முதலிய அரும்பணிகளைப் புரிந்துகொண்டிருந்தார். குமர குருபரரும் குமாரகவிகளும் திருப்பரங்குன்றத்தை யடைந்து ஆங்கெழுந்தருளியுள்ள பெருமானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

அந்நாளில் மதுரை மாநகரைத் திருமலை நாயகர் என்பவர் அரசாட்சி செய்துகொண்டிருந் தார். அங்கயற்கண் அம்மையார் அவ்வரசருடைய கனவில் தோன்றி, "நம்முடைய திருமகனாகிய திருமுருகனுடைய திருவருளைப் பெற்ற ஒருவன் நம்மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடிக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றான். நீ நின் பரிவாரங்களோடு சென்று அவனை அழைத்துவந்து அப்பிள்ளைத்தமிழை நம் முன்னிலையில் அரங் கேற்றஞ் செய்யக் கடவாய்" என்று கட்டளை யிட்டருளினார். திருமலைநாயகர், அம்மையார் தமக்களித்த கட்டளை கண்டு பெருங்களிப்படைந் தார். மறுநாட்காலையில் தாம் கண்ட கனவினை எல்லோருக்கும் வெளிப்படுத்தினார். அம்மையார் கட்டளைப்படி திருப்பரங்குன்றத்தையடைந்தார். குமரகுருபரரைக் கண்டு பலபடியாகப் போற்றி வழிபட்டார். இறைவியினுடைய கட்டளையைத் தெரிவித்து மதுரைக்கெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். குமரகுருபரரையும் அவர் பாடியருளிய பிள்ளைத் தமிழையும் யானைமீ தேற்றிக்கொண்டு ஊர்வலமாக மதுரையை அடைந்தார்.

குமரகுருபரர் அங்கயற்கண்ணம்மை திருக் கோயிலையடைந்து இறைவனையும் இறைவியை யும் வணங்கினார். அப்போது அங்கயற்கண் அம்மையார் தம்முடைய இளந்திருக்கோலக் காட்சியைக் குமரகுருபரர்க்குக் காட்டியருளினார். குமரகுருபரர், இது பிள்ளைத்தமிழ் பாடியதற்குப் பரிசென்றெண்ணிப் பெருமகிழ்ச்சியடைந்தார்.

அம்மையாருடைய முன்னிலையில் பிள்ளைத் தமிழரங்கேற்றுதலுக்கு வேண்டியன செய்யப் பட்டன. ஒரு அடியார் பிள்ளைத்தமிழ் நூலை ஓர் உயர்ந்த அணையில் வைத்துப் பூசனை புரிந்தார். குமரகுருபரரின் கட்டளைப்படி குமார கவிகள் பாட்டினைப் படித்தார். குமரகுருபரர் பாட்டின் பொருளை அனைவரும் அறியுமாறு விரித்துரைத்துச் சொற்பொழிவு செய்தார். இவ்வாறு ஒவ்வொரு பருவமாக அரங்கேற்றுதல் நிகழ்ந்து வந்தது. முத்தப் பருவத்தில்.

*Desire the desire of Him who is without desire; in order to renounce desire, desire that desire.*

350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே உயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே உயிர்த்துணையாந்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
..................................................
..................................................."

என்னும் பாட்டினைக் கூறிப் பொருள் விரிக்குங்கால் அங்கயற்கண்ணம்மையார் பூசகர் ஒருவருடைய மகளைப் போலத் திருக்கோலங்கொண்டு ஆங்கு வீற்றிருந்தார். பாடலின் சொற்பொழிவு முடியும் வேளையில் அவர் அரசர் கழுத்திலே விளங்கிய முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரர்க்குப் பரிசாக அவர் கழுத்திலணிந்தருளினார். பின்னர் வருகைப் பருவத்திலே,

"தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கைஅகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே"

என்னும் பாடலைப் பாடி முடித்ததும், பூசகர் மகளாகப் போந்திருந்த அங்கயற்கண்ணம்மையார் "இப் பாடலை இன்னுமொரு தடவை கூறுக," என்று கூறிப் பாடச் செய்து மகிழ்ந்து மறைந்தருளினார். அப்பொழுதுதான் அங்கெழுந்தருளியிருந்தவள் அங்கயற்கண்ணம்மையார் என்பது அனைவருக்கும் விளங்கியது. அனைவரும் குமரகுருபரரின் பெருமையை வியந்து கொண்டாடினர். பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் முற்றுப்பெற்றது. திருமலைநாயகர் குமரகுருபரரை அரியணையிலே அமரச்செய்து செய்யவேண்டிய சிறப்புக்களையெல்லாஞ் செய்து போற்றினார்.


பின், குமரகுருபரர் திருமலைநாயகர் விரும்பியபடி அந்நகரத்திலே சிலநாள் தங்கியிருந்தார். அப்போது, மீனாட்சியம்மைகுறம், இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம் ஆகிய நூல்களைப் பாடியருளினார். ஒருநாள் நீண்ட நேரம் திருமலைநாயகர் நண்பகலுணவு கொள்ளாது ஆட்சிக் காரியங்களில் உள்ளத்தைச் செலுத்தியிருந்தார். அப்போது குமரகுருபரர்,

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது."

என்னுந் திருக்குறளைக் கூறினார். நாயக்க மன்னர் அதன் பொருளை வினவினார். "ஒருவன் கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்து வைத்துக்கொண்டு அதற்கு உரியவனாக விருப்பினும், இறைவனால் வகுக்கப்பட்ட அளவிற்கு மேல் ஒரு சிறிதேனும் அப்பொருளில் நுகர்தல் அருமையானது." என்பதே அக்குறளின் பொருளென்றருளினார். திருமலைநாயகர் திருக்குறளின் கருத்துக்களை உணரவேண்டும் என்னும் எண்ணத்துடன் திருக்குறளிலுள்ள பொருளையமைத்து ஒரு சிறிய அறநூல் செய்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். குமரகுருபரரும் நாயகர் விரும்பியபடி நீதிநெறிவிளக்கத்தைப் பாடி அதன் பொருளையும் அவருக்கு விரித்துரைத்தருளினார்.

(மிகுதி மறு இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

அகவை எழுபத்தைந்து கண்ட

# மட்டுவிலூர் தந்ததிறல் மைந்தன் நடராசன்

## வளம்பெற்று வாழிய பல்லாண்டு!

வெண்பா

ஆட்டை பெறு பத்தைந்தி லாம்பவள மாவிழாக்கொள்
டாட்டத்தை யுங்கா ணவைபெற்று - வாட்டமிலாச்
சைவத் தமிழ்த்தொண்டுந் தாங்கிநட ராசனென்றும்
நைவற்று வாழ்க நலத்து.

மட்டுவிலூர் தந்ததிறன் மைந்த நடராசன்
மட்டறையு மின்சொன் மதுரனவன் - எட்டியன
பேய்ச்சாற்ற லுள்ளாரும் பேசுதலைப் பேச்சாற்றல்
வாய்க்கதுரன் போலவே வாழ்ந்து. 1

நல்ல தமிழ்நூல்கள் நல்கி யெவர்க்குமவை
வெல்லுமியல் பேற்ற விசயத்தான் - எல்லவரும்
கிட்டநின்று போற்றுதகைக் கேண்மைநட ராசனிவை
தொட்டென்றும் வாழ்க தொடர்ந்து. 2

சிட்டரென ஞானவொளி சித்தாந்த மாபதியாம்
மட்டுவிலூர் தந்த மதிமைந்தன் - பெட்புறு
மாமன்னர் பற்றுனைந்து பெய்திடப் பிறைவேணி
யீசனரு ளால்வாழ்க வீங்கு. 3

சிந்தையுருஞ் சேர்ச்சியிலை சேர்ந்தவிந்து வெள்ளுஞ்சொல்
செந்தமிழ் மாகச் செயுமரவோன் - சித்தகதி
பெற்றநட ராசன் பிறையா பிரதாபங்கள்
ஒற்றுமுக நிறைந் துவந்து. 4

நடராசன் முன்னைநாளாய் நல்லசைவம் பேணும்
திருமகள் மட்டுவிலூர்ச் செல்வ - நடராசன்
பல்லாண் டினிதிருந்து பாரகத்து வாழியரோ
சொல்லாண்ட பேரிற் பயின்று. 5

நல்லதமி ழாசானாய் நற்றமிழைப் போதித்தே
வல்லவருள் எத்து யிடம்பிடித்த - வல்லவனே
யானநட ராசன்சீர் தாங்க பாரெங்கும்
சேவைதிடன் வாழ்க பொலிந்து. 6

மட்டுவிலிற் சித்தாந்தம் வந்தபா ரம்பரியம்
முட்டுறாமற் காக்கு முயற்சியொடு - தொட்டவனே
யானநட ராசன்பா னம்பலவன் நாளுமருள்
வேண்டிற்று வாழ்க விரிந்து. 7

- உடுப்பிட்டி நீலகண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## [illegible]

**தை:**

| | | | |
|---|---|---|---|
| 01 | 15-01-2003 | புதன்கிழமை | தைப்பொங்கல் |
| 02 | 16-01-2003 | வியாழக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 03 | 17-01-2003 | வெள்ளிக்கிழமை | அரிவட்டாயர் குருபூசை |
| 04 | 18-01-2003 | சனிக்கிழமை | பூரணை விரதம் |
| 05 | 19-01-2003 | ஞாயிற்றுக்கிழமை | தைப்பூசம் |
| 07 | 21-01-2003 | செவ்வாய்க்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 08 | 22-01-2003 | புதன்கிழமை | சண்டேசுரர் குருபூசை |
| 12 | 26-01-2003 | ஞாயிற்றுக்கிழமை | திருநீலகண்டர் குருபூசை, காழுமானவ சுவாமி குருபூசை |
| 16 | 30-01-2003 | வியாழக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 18 | 01-02-2003 | சனிக்கிழமை | அமாவாசை விரதம் |
| 20 | 03-02-2003 | திங்கட்கிழமை | அப்பூதியடிகள் குருபூசை |
| 22 | 05-02-2003 | புதன்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 23 | 06-02-2003 | வியாழக்கிழமை | கலிக்கம்பர் குருபூசை |
| 24 | 07-02-2003 | வெள்ளிக்கிழமை | ஷஷ்டி விரதம் |
| 26 | 09-02-2003 | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 29 | 12-02-2003 | புதன்கிழமை | கண்ணப்பர் குருபூசை |

**மாசி:**

| | | | |
|---|---|---|---|
| 01 | 13-02-2003 | வியாழக்கிழமை | மாசி மாதப்பிறப்பு |
| 02 | 14-02-2003 | வெள்ளிக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 03 | 15-02-2003 | சனிக்கிழமை | நடேசராபிஷேகம் |
| 04 | 16-02-2003 | ஞாயிற்றுக்கிழமை | பூரணை விரதம் |
| 05 | 17-02-2003 | திங்கட்கிழமை | மாசி மகம் |
| 07 | 19-02-2003 | புதன்கிழமை | திருவள்ளுவர் குருபூசை |
| 08 | 20-02-2003 | வியாழக்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம், எறிபத்தர் குருபூசை |
| 14 | 26-02-2003 | புதன்கிழமை | காரியார் குருபூசை |
| 16 | 28-02-2003 | வெள்ளிக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 17 | 01-03-2003 | சனிக்கிழமை | மகாசிவராத்திரி விரதம் |
| 18 | 02-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | அமாவாசை விரதம், கோச்செங்கட் சோழர் குருபூசை |
| 23 | 07-03-2003 | வெள்ளிக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 25 | 09-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் |
| 27 | 11-03-2003 | செவ்வாய்க்கிழமை | கச்சியப்ப சிவாசாரியார் குருபூசை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

நாடியசத் திநிபாதம் நாலு பாதம்
நண்ணும்வகை எண்ணரிய ஞானபாதம்
கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன்ஒரு மூர்த்திகொடு குறுகி மோகம்
நீடியகே வலசகலம் நிகழா வாறு
நிருத்திமலம் அறுக்குமிது நிலைமையார் சுத்தம்
கேடில்புகழ் தருஞ்சரியை கிரியா யோகக்
கேண்மையிரால் இவை உணர்த்தக் கிளக்கும் நூலே 49

இ-ள்: நாடிய சத்திநிபாதம் நண்ணும்வகை நாலு பாதம் - ஆராயப்பட்ட சத்திநிபாதம் உயிர்களுக்குப் பொருந்துமுறை மலபரிபாகத்திற் கேற்ப மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரமென்னும் நான்குபாதங்களை உடையது, எண்ணரிய ஞானபாதம் கூடும் அவர் தமக்கு - நினைத்தற்கரிய தீவிரதர சத்திநிபாதம் பொருந்தப் பெறுபவர்களுக்கு, உணர்வாய் நின்ற ஞானக்கூத்தன் அறிவுக் கறிவாய் நின்றுணர்த்தி வந்த ஞானநடனஞ் செய்பவன், ஒரு மூர்த்திகொடு குறுகி - ஒப்பற்ற குருவடிவங் கொண்டெழுந்தருளி வந்து, மோகம் நீடிய கேவல சகலம் நிகழாவாறு நிருத்தி மலம் அறுக்கும் - மயக்கம் மிக்க கேவலத்தையும் விகற்பத்தையுடைய சகலத்தையும் மீண்டும் வாராவாறு நிவர்த்தி மலங்களைப் போக்குபவன். இது நிலைமையார் சுத்தம் - இந்நிலைபெறுதலைப் பொருந்திய சுத்தாவத்தையாகும், கேடு இல் புகழ் தரும் சரியை கிரியா யோகக் கேண்மையிரால் - கேடில்லாத புகழைத்தரும் சரியை கிரியை யோக சம்பந்தமுடையவர்களாயின், இவை உணர்த்த நூல் கிளக்கும் - மந்ததரம் முதலிய நால்வகைச் சத்திநிபாதங்களின் முறைமையையும் அவர்களுக்கு உபதேசிக்குமாறு ஆகமம் சொல்லும் என்க.

சத்திநிபாதம் என்பது ஆன்ம அறிவின் கண்ணே திருவருட் சத்தி பதிதல். சத்திநிபாதத்துக்குக் காரணம் இருவினையொப்பும் மலபரிபாகமுமாகும். இவை பல பிறவிகளிற் செய்த சிவ புண்ணியங்களால் உண்டாகும். சத்தி - திருவருட் சத்தி. நிபாதம் - பதிதல்.

மந்ததர சத்திநிபாதமாவது ஒருகூறு திருவருட் சத்திபதிய ஒருகூறு ஆணவமல சத்தி நிற்றல். மந்த சத்திநிபாதமாவது இருகூறு திருவருட் சத்தி பதிய இருகூறு மலசத்தி நிற்றல். தீவிர சத்திநிபாதமாவது மூன்று கூறு திருவருட் சத்தி பதிய மூன்றுகூறு மலசத்தி நிற்றல். தீவிரதர சத்திநிபாதமாவது நான்கு கூறு திருவருட் சத்தி பதிய ஆணவமலத்திலிருந்து முற்றாக விடுபடுதல்.

சத்திநிபாதர் ஆனோரைச் சரியை கிரியா யோகங்களில் நிறுத்தி மலவாசனைகளைச் சுத்தப்படுத்தி ஞானத்துக்கு யோக்கியராகப் பண்ணுவர். ஞானகுருவின் உபதேசம் ஒரே தன்மையாக விருப்பினும் அவரவர் பக்குவத்திற் கேற்ப ஞானப் பேறுடையவராகின்றார். ஒரே விதமாக ஞானமுண்டாகாது. முன்னர்க் கூறிய நால்வகைச் சத்திநிபாதர்களுக்கும் ஞானம் ஏறுதல் முறையே வாழைத்தண்டிலும் பச்சை விறகிலும் உலர்ந்த விறகிலும் கரியிலும் தீ பற்றுதல் போன்றிருக்கும்.

தீவிரதர சத்திநிபாதமுடையவர்கள் ஞானாசாரியனை அடைந்தவுடன், அவர் தீக்கை செய்து, மலத்தை நீக்கி, பாசங்களைச் செயலறுக்கச் செய்து ஞானத்தைக் கொடுப்பார்.

இந்தக் கூறப்பட்ட வேளை சகலர்களைப் பிற் பெறுப்பது தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தாவத்தை, சீவன் முத்திச் சுத்தாவத்தை பரமுத்திச் சுத்தாவத்தையென இருவகைப்படும். இங்குக் கூறப்பட்டது பரமுத்திச் சுத்தாவத்தையாகும்.

அரிவையின் பமுத்தி கந்த மைந்தும்
அறுமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்திஇலை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலவுயிர் அருள்சேர் முத்தி
திகழ்முத்தி பிறமுத்தித் திறத்த தாமே. 50

இ-ள்: அரிவையர் இன்பமுத்தி - பெண்களையணைந்து இன்பம் அனுபவிப்பதே முத்தி. கந்தம் ஐந்தும் அறுமுத்தி - பஞ்ச கந்தங்களும் அறுவதே முத்தி. திரி குணமும் அடங்கும் முத்தி - முக்குணங்களும் அடங்குவதே முத்தி. விரவு வினை கெடு முத்தி - பொருந்துகின்ற கன்மம் கெடுவதே முத்தி. மலம் போம் முத்தி - ஆணவ மலம் கெடுவதே முத்தி. மலம் போம் முத்தி - ஆணவ மலம் கெடுவதே முத்தி. விக்கிரக நித்த முத்தி - சரீரம் அழியாது நித்தியமாய் இருப்பதே முத்தி. விவேக முத்தி - பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிவதே முத்தி. பரவும் உயிர் கெடும் முத்தி - வியாபகமாயிருக்கின்ற உயிர் கெடுவதே முத்தி. சித்தி முத்தி - அணிமா சித்திகளைப் பெறுவதே முத்தி. பாடாண முத்தி - கல்போலக் கிடப்பதே முத்தி. இலை பழிசேர் முத்தி - என்றின்னோரன்ன முத்திகளனைத்தும் பழிக்கப்படும் முத்திகளாகும். திரிமலமும் அகல உயிர் அருள் சேர் முத்தி திகழ் முத்தி - மும்மலங்களும் விட்டு நீங்க உயிர் திருவருளைச் சேரும் முத்தியே சிறந்து விளங்கும் முத்தியாகும். இது முத்தித் திறத்தது ஆம். இதுவே முத்திகளுள் சிறைபெறுதலுடையதாகும் எ-று.

உலகாயதர், கடவுளும் ஆன்மாவும் இல்லையெனவும் இம்மையிற் பெண்ணின்பத்தை அனுபவிப்பதே முத்தியென்றும் கூறுவர். பௌத்தரில் ஒரு பிரிவினராகிய சௌத்திராந்திகர், பஞ்ச கந்தங்களும் கெடுவதே முத்தியென்பர். பஞ்ச கந்தங்கள் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்துமாம்.

சாங்கிய மதவாதசர், முக்குணங்களும் அடங்குவதே முத்தி என்பர். அருகர் கன்மம் கெடுவதே முத்தியென்பர்.

பேதவாதிகள், திருவருளால் ஆணவமலம் கெட ஆன்மா சுத்தமாய் விளங்குவதே முத்தி என்பர்.

கன்ம யோகிகள் அவிர்பாகம் முதலியவற்றால் சரீரம் நித்தமாயிருப்பதே முத்தியென்பர்.

மாயாவாதி, சுத்தமாயிருக்கும் பிரமம் மாயா உபாதிகளாலே மறைக்கப்பட்டுச் சீவான்மாவென நிற்குமெனவும் சீவான்மாவிடத்தே விவேக ஞானந்தோன்றி மாயா உபாதிகளை நீக்குவதே முத்தியென்றும் கூறுவன்.

பாஞ்சராத்திரர் பிரகிருதியையும் புருடனையும் பகுத்துணருங்கால் அவித்தை நீங்குமெனவும் அதுவே முத்தியெனவுங் கூறுவர். இங்குப் புருடன் பகுத்துணர்தலாவது இன்பதுன்பம் பிரகிருதிக் குண்டென்றும் புருடனுக்கில்லையென்றும் அறிதல்.

பிரகிருதி - சரீரம்.

பாற்கரபன். ஆன்மா பிரமத்தோடு சேர்ந்து, தான் கெட்டுப் பிரமத்தோடு ஒன்றாவதே முத்தி என்பன்.

சித்தர்கள் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளைப் பெறுவதே முத்தி என்பர்.

பாடாண வைசேடிகர் கல்லுப்போற் கிடப்பதே முத்தி என்பர். இங்குக் கூறப்பட்ட முத்திகளெல்லாம் ஒரு காலவெல்லையில் அழிந்து போவனவாகும். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் வலிகெட்டு நீங்க உயிர் திருவருளைச் சேரும் முத்தியே உண்மை முத்தியாகும்.

பொதுவதிகாரம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநீதி நடத்தும்

## சைவசமயச் சிறுகதைப் போட்டி

பாடசாலை மாணவர்கள் சமய அறிவைப் பெறக்கூடியதான சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுகிறது. "கிரிசாம்பாள்", "சிவாக்கியர்", "ஓம் நான் சொல்லுகிறேன்" என்பவற்றை அடியொற்றிக் கதைகள் அமையலாம். கதைகள் சைவசமயத் தத்துவங்களைத் தெரியப்படுத்துவனவாயும் சமய அறிவூட்டுவனவாயும் அமைய வேண்டும்.

- கல்வியியற் கல்லூரியிற் பயிலும் ஆசிரியர்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலையில் சைவசமயம் போதிக்கும் ஆசிரியர்களும் இதில் பங்குபற்றலாம்.

| | |
|---|---|
| முதற் பரிசு | ரூபா 3000/- |
| இரண்டாம் பரிசு | ரூபா 2000/- |
| மூன்றாம் பரிசு | ரூபா 1000/- |

**போட்டி முடிவுத் திகதி 31-01-2003**

*மாதிரி விண்ணப்பப் படிவம்*

பெயர்:-.............................................................................

முகவரி:-...........................................................................

..........................................................................................

தொழில்:-..........................................................................

பிறந்த திகதி:-..................................................................

..................　　　　　　　　　　　　..........................................

திகதி　　　　　　　　　　　　　　　　　　　　கையொப்பம்

அனுப்பவேண்டிய முகவரி:-

**சைவநீதி போட்டிப் பிரிவு**

**166, காலி வீதி, கொழும்பு-04.**

ஆசிரியர் குழு, சைவநீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

## வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* பெரிய புராண வசனம்
* சிவஞான சித்தியார் (சுபக்கம்) - மூலமும் உரையும்
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

---


எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

# கலையரசி

**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13. தொ.பே: 478885**



Regd. No. QD/25/News 2002 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு [illegible] 2003 இல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org